REGD. M. 4642.

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 6 | 4–1–48 | இதழ் 3

## நமக்கொரு சாக்ரடீஸ் தேவை!

—✲—

“மேல்நாட்டிற்கு, உபதேசியாராகவும், உண்மை நாடுவோராகவும் சாக்ரடீஸ் இருந்தார். அவர் வாழ்ந்த காலம், இன்று நாம் வாழும் காலத்தைப்போன்றே பல நிலைகளிலும் ஒத்திருந்தது. மாறுபட்ட நம்பிக்கையும், பழக்கவழக்கங்களுமே முக்கியமானதாக அன்று சமுதாயத்தில் வேரூன்றிக்கிடந்தன. அதனையே, உண்மையான அறிவியல் என மக்கள் நம்பி இருந்தனர்.

அந்த மக்கள், நம்மைப்போன்றே, எந்தவிஷயத்தையும் குறித்து, எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு விட்டதாகத் தீர்மானித்துக் கொண்டிருந்தனர். இதைத்தான் சாக்ரடீஸ் தகர்த்தெறிந்தார். அவர் பற்பல விதமான கேள்விகளைக்கேட்க ஆரம்பித்தார். எதனையும், சிந்திக்காமல் ஏற்றுக்கொள்ள மறுத்தார். இதனால், அவர்கள் வெறுப்பைச் சம்பாதித்துக் கொண்டார். அதன்பயனாக, அவர் உயிர்துறக்க நேரிட்டது. இருந்தாலும், மேநாட்டுப் போதகாசிரியர்களுள், சாக்ரடீஸ் தான் தலைசிறந்தவராவார்.”

சர். இராதாகிருஷ்ணன்,

28–12–47

## மணவினையில் பிணவினை

20-ம் பக்கத் தொடர்ச்சி

இடங்கழி என்பவரைத், திருடியாயினும் தம்முடைய அடியவர்களுக்கு அன்னமிடச்சொன்னார்.

கோட்புலிக்கு, ஒரு பால்மணம் மாறாத பச்சிளங்குழந்தையைப் பதைக்கப் பதைக்கக் கொன்று வீழ்த்தும் கொடுமையைச் செய்யும்படி தூண்டினார்.

காரைக்காலம்மையார் என்பவரைத் தலையால் நடக்கும்படி செய்து, பெண்ணினத்துக்கே இழிவையும் மானக்கேட்டினையும் உண்டாக்கினார்.

மங்கையர்க்கரசியைக், கணவனை விட்டு விலகியாயினும் சைவத்தை வளர்க்கும்படி செய்து, கணவன் மனைவியர்க்கிடையே உள்ள ஒற்றுமையைக் குலைத்தார்.

குலச்சிறை என்பவரைக்கொண்டு சமண முனிவர்களைக் கழுவிலேற்றிக் கொன்றார்.

விசாரசருமர், தன் தந்தையின் காலையே வெட்டிக் கொல்லும்படி செய்தார்.

திருநாளைப்போவாரைத், தில்லைப் பார்ப்பனரைக் கொண்டு நெருப்பில் தள்ளிக் கொன்றார்.

தாயனார் தம்முடைய கழுத்தைத் தாமே அரியும்படி செய்தார்.

ஏனாதி நாதர், திருநீற்றுக்காக ஏமாந்து கொலை செய்யப்பட்டார்.

எறிபத்தர், ஒரு மன்னனின் பட்டத்து யானையையும் பாகரையும் கொல்லும்படி செய்தார்.

மெய்ப்பொருள் நாயனார், சைவத்தின்பால் கொண்டிருந்த பற்றுதல் காரணமாக ஒருவனால் ஏமாந்து கொல்லப்பட்டார்.

கலியர், தம்முடைய மனைவியைத் தெருத் தெருவாய்க் கொண்டுபோய் விலை கூறும்படியும், தம்முடைய கழுத்தைத் தாமே அறுத்துத் தற்கொலை செய்யும்படியும் செய்தார்.

சத்தி என்பவர், பிறர் நாக்கறுப்பதையே தம்முடைய பணியாகக் கொள்ளும்படி செய்தார்.

இவையும் இவைபோன்ற இன்னும் எத்தனையோ கொடுமைகள், வரலாற்று நூலென்றும், சரித்திரப்புகழ்பெற்ற நூலென்றும் சொல்லப்படும் பெரிய புராணத்தில் காணப்படுகின்றனவே! இவைதாமா ஆண்டவன்தன் அருட்டிறத்தை அளந்து காட்டும் அளவுகோல்கள்? இப்படித்தான் ஒரு கடவுள் தன் அடியவர்களின் அன்புப் பெருக்கைச் சோதிப்பதா? இவை, உலகியலுக்கும் — மக்கட் பண்புக்கும் — கடவுட்டன்மைக்கும்— அறிவுடைமைக்கும் ஏற்றவை தாமா? என்பனவற்றைக் காய்தல் உவத்தல் இன்றிக் கடவுளன்பர்கள் தங்கள் கருத்திலிருத்திப் பார்க்க வேண்டாமா?

ஒருவனுக்கு ஒரே பெண்; அதுவும், அவனுக்கு நீண்ட காலமாக மகப்பேறின்றி இருந்து, பெற்றெடுத்த பெண்; அப்பெண்ணுக்குத் திருமணம் நடக்கப் போகிறது; பெண் வீட்டார் மணமகன் வரவை எதிர் நோக்கி நிற்கின்றனர்; மணமகனும் தன் ஊரை விட்டுப் புறப்பட்டு விட்டான்; இந்த நேரத்தில் தான், மகேசுவரன் ஒரு மாவிரதியார் வேடம் பூண்டு மானக்கஞ்சாறர் வீட்டுக்கு வருகின்றார்; வந்து அவருடைய புதல்வியின் கூந்தலைத் தம்முடைய பூணூலுக்காகத் தரும்படி கேட்கின்றார்; மானக்கஞ்சாறரும் அஞ்சாது கூந்தலை அரிந்து கொடுக்கின்றார்; உடனே மாவிரதியார் மகேசுவரனாக மாறுகின்றார்; மாறி, "மானக்கஞ்சாறரே! உம்முடைய அன்பை உலகறியச் செய்தேன், இதோ என்னுடைய திருவடிப்பேற்றை உனக்களித்தேன்" என்று திருவாய்மலர்ந்தருளுகிறார். மானக்கஞ்சாறரும் மகேசுவரனுடன் சென்றுவிடுகிறார். என்றால் என்ன பொருள்? மண்ணுலகை நீத்து விண்ணுலகம் போகிறார் என்பதுதான். அப்படியென்றால்? அப்படியென்றால், இறந்துவிடுகிறார் என்று பொருள். சைவ சமயத்தவர் யார் இறந்துவிட்டாலும், இறந்தவர், சிவனுடைய திருவடிப்பேற்றைப் பெற்றுவிட்டார்— சிவபதம் அடைந்துவிட்டார்–சிவனோடுஇரண்டறக் கலந்துவிட்டார் என்று கூறுவதுதான் வழக்கமேயொழிய, இறந்துவிட்டார் என்றுபச்சையாகக் கூறுவதில்லை. இவ்விதம்தான் மற்றச் சமயத்தவர் இறந்துவிட்டாலும் சிறப்பித்துக் கூறுவது வழக்கம்.

அப்படியானால், மானக்கஞ்சாறர் தம் புதல்வியின் மணப்பந்தலிலேயே இறந்து விட்டாரா? அதில் என்ன சந்தேகம். இறந்தேதான் விட்டார். இறந்துவிட்டார் என்று பச்சையாகக் கூறினால், படிப்பவர் மனம் பதறும் என்பதற்காகவே,

"பெருங் கருணைத் திறம்போற்றும் பெரும்பேறு நேர்பெற்றார்"

என்று மறை பொருளாகக் கூறியுள்ளார் குன்றத்தூரார். மானக்கஞ்சாறர், மகேசுவரனுடைய திருவடிப்பேற்றைப் பெற்ற பின்னர்தான், மணமகனான கலிக்காமர் வந்தார். வந்தவர், அங்கிருந்தவர்களிடத்தில் நிகழ்ந்ததைக்கேட்டு மனந்தளர்ந்து, மணவினையை முடித்துக்கொண்டு தம்முடைய ஊருக்கு போய்விட்டார். நிகழ்ச்சி எப்படி இருக்கிறது பாருங்கள்! மணவினை, பிணவினை இரண்டும் ஒரே நேரத்தில் ஒரே இடத்திலேயே 'சிறப்பாக' நடந்திருக்கிறது. சிவ அன்பர்கள் இந்நிகழ்ச்சியைப் படித்ததும், 'என்னே! சிவனார்தம் அருட்டிறம்" என்று சிந்தை மகிழ்வர் போலும்!

மானக்கஞ்சாறர், தமக்கு அருமையாகப்பிறந்த ஒரே பெண்ணின் திருமண நிகழ்ச்சியைத் தம் கண் குளிரக்கண்டு களிப்புறும் பேற்றைக் கூடப்பெற விடாமல், அந்த அருட்பெரும் வள்ளலாம் சிவன் அவரைத் தம்முடன் அணைத்துக்கொண்டாரா! அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி அருமை அருள் அனைவர்க்கும் வழங்கும் பெரு நோக்கின் பெற்றியே பெற்றி!

✲

## "திராவிடநாடு"

இரயில்வே நிலையங்களிலுள்ள எல்லா ஹிக்கின்பாதம் புத்தகசாலைகளிலும் "திராவிடநாடு" விற்பனைக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

★

## சந்தாதார்களுக்கு

"திராவிடநாடு" சந்தாதார்கள் பலர் பாக்கியை அனுப்பாமல் இருக்கிறார்கள். இவ்வறிக்கைகண்ட ஒரு வாரத்திற்குள் பாக்கி அனுப்பாவிட்டால் பத்திரிகை நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மானேஜர்

# ஆசைக்கும் அச்சத்துக்கும் இடையே!

N. G. O. ஸ்ட்ரைக் நின்றுவிட்டது! ஆம்! முறிந்துவிட்டது என்று கூறினால், N. G. O. நண்பர்கள் வெந்த புண்ணிலே, வேல்விடுகிறீரே என்று கூறி வருத்தப்படுவார்கள். கண்ணியமான ஓர் சமாதானம் ஏற்பட்டது, என்று கூறினால், பலம் பொருந்திய சர்க்கார், அவ்விதம் சொல்லாதே! சமாதானம் செய்து கொள்ளவேண்டிய அளவு, அந்த N. G. O. க்கள் ஒன்றும் பிரமாதமானவர்களல்ல, சர்க்காரை நடத்தும் தாங்கள் சாமான்யர்களல்ல, என்று வீரம் பேசுவர்—காரமாகவே கூட. எனவேதான், அடைமொழி சூட்டாது, நின்றுவிட்டது என்று மட்டும் கூறினோம்.

நடை இது—ஆனால் நிலைமை என்ன? சர்க்காரின் எதிர்ப்பு, சர்க்கார் உத்யோகஸ்தர்களுடைய 'தாங்கும்' சக்தியைத் தகர்த்துவிட்டது. ஒரு வாரகால வேலைநிறுத்தம், சர்க்காரின் பலத்தால், முறியடிக்கப்பட்டு விட்டது. எந்தக் குறைகளுக்காக, வேலைநிறுத்தம் துவக்கப்பட்டதோ, அவைகளுக்குப் பரிகாரம் எதுவும் கிடைக்கவில்லை. பரிகாரம் தரப்படும் என்று வாக்குறுதி தரப்பட்டு, அந்த ஒப்பந்தத்தின் மீது வேலை நிறுத்தம் கைவிடப்படவுமில்லை. வரலாற்று முறையிலே கூறுவதானால், 1. வேலைநிறுத்தம் துவக்கப்பட்டது. 2. சக்கார் சளைக்காமல் அந்த வேலை நிறுத்தத்தை எதிர்த்து வேலை செய்தது. 3. வேலை நிறுத்தம் நின்றுவிட்டது—என்றுதான் அமையும்.

ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் N. G. C. க்கள்—சாதாரணத் தொகை அல்ல.

மாகாணமெங்கு உள்ளவர்கள்—

சர்க்காரின் நடைமுறை வேலைகளின் நாடி, நரம்புகளைக் கவனித்துக் கொண்டுள்ள, பொறுப்பான வேலைகளிலிருப்போர்.

100க்கு 90 பேர் என்று கூறக்கூடிய அளவினவர், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

விளைவுகளுக்கும், மார்காட்டி நின்று, சிலர் சிறைப்பட்டனர்-சிலர் தடியடிபட்டனர் - சிலருக்குக் கண்ணீர் புகைக் குண்டு காயமும் ஏற்பட்டது.

ஒரு குறிப்பிடத்தக்க கட்டுப்பாடும், ஒற்றுமை உணர்ச்சியும், போராட்ட சக்தியும் காட்டப்பட்டது.

வேலைநிறுத்தம் ஏற்பட்ட பிறகு, அவர்கள் மீது வசைமாரி மொழிந்தன சில ஏடுகள், என்ற போதிலும், அதற்கு முன்பு, அவர்களின் குறைகள் கவனிக்கப்பட வேண்டியவை, தீர்க்கப்பட வேண்டியவை, என்று ஆதரித்தே, பல பத்திரிகைகளும் எழுதின.

ஆக, எண்ணிக்கையில், ஏற்பாட்டில், கட்டுப்பாட்டில், N. G. O. க்கள், வலிவற்றவர்கள் என்று கூற முடியாது.

இவ்வளவு இருந்தும், அவர்களால் ஒருவார காலத்துக்கு மேல், சமாளிக்க முடியவில்லை—சரிந்து கீழே சாய்ந்தனர்.

கேலி செய்ய அல்ல, இதனை நாம் கூறுவது. நிலைமையை உள்ளது உள்ளபடி, அவர்களும், பிறரும் உணர வேண்டும் என்பதற்காகக் கூறுகிறோம்.

எந்த நாட்டிலும், பொதுவாகவே வேலை நிறுத்தம், என்றால், ஆள்வோர் ஆயாசமடைவர் — அதிலும், சர்க்கார் சிப்பந்திகள் வேலைநிறுத்தம் செய்கின்றனர் என்றால், ஆயாசப்படுவது மட்டுமல்ல, அஞ்சவும் செய்வர்.

சர்க்காரை நடத்திச் செல்லும் பொறுப்பை அந்தச் சமயம் ஏற்றுக் கொண்டுள்ள கட்சி மீது பொதுமக்கள், காய்வர், பாய்வர்.

மாற்றுக் கட்சியினர், ஆட்சிப் பொறுப்பைச் சரியாக ஏற்று நடத்த முடியாத கட்சியிடம் ஒப்படைத்து விட்டீர்கள், அதன் விளைவு சட்ட சபைகளிலே சரமாரியான கேள்விகள் புறப்படும்; கட்சிக்குள்ளே பல குழப்பம் ஏற்படும்; கூட்டு மந்திரி சபை, கலப்பு மந்திரிசபை, புதிய மந்திரிசபை, என்ற பேச்சுக்கள் கிளம்பும்—ஆளும் கட்சி ஆரண்யம் சென்று, அடவியிலுள்ள கட்சி ஆட்சிப்பீடம் ஏறவும் கூடும். அவ்வளவும், அதற்கு மேலுங்கூட நடைபெறுவதுண்டு.

இங்கோ, சர்க்கார் சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்தனர்—பிறகு நிறுத்திக் கொண்டனர் என்றாகிவிட்டது, நிலைமை.?

முன்னேற்பாடு குறைவா? அவ்விதம் கூறுவதற்கில்லை—சங்கத்தலைவர் சுற்றறிக்கைகள்விட, பல சிறு நகர்களில் உள்ள சிப்பந்திகளும், அந்த அறிக்கைகளின்படி நடந்துகொண்டனர்.

சங்கத்தலைவர் தைரியமற்றவரா? இல்லை! தடை உத்தரவுகளைக் கூடமீறுவேன் என்று பேசினார். கண்ணீர்ப்புகைக் குண்டின் சிதறிய பாகத்தைக் கையிலேந்திக் கொண்டு, சர்க்கார் காரியாலயங்களுக்குச் சென்று, மற்றோர் காற்சிலம்பைக் காட்டி நீதிகேட்ட கண்ணகி போல, வாதாடியும் நின்றார், எனினும், வேலை நிறுத்தம் வெற்றி தரவில்லை. ஏன்?

இந்தக் கேள்விக்குப் பதில்—இந்த வேலை நிறுத்த சம்பவத்திலே மட்டும் தேடினால் கிடைக்காது.

N. G. O. க்கள், சட்டத்தின் சந்துகள் சரிவுகள், செக்ஷன்களின் பொருள், இலாக்கா தலைவர்களின் அமுல் ஆகியவற்றுக்கிடையே உலவுபவர்கள். எனவே அவர்களுக்கு, கிளர்ச்சிகள் துவக்கப்பட்டால், என்னென்ன விளைவுகள் ஏற்படக்கூடும், அந்தக் கிளர்ச்சிகளை ஒடுக்க என்னென்ன முறைகள் உள்ளன என்ற 'விவரம்' தெரியும்.

இந்த 'விவரம்' தெரிந்த காரணத்தால், அவர்கள், சில முன்னேற்பாடுகள் செய்துகொண்டு, சட்டவேலிகளை எட்டிக்குதித்துத் தாண்ட முயல்வர்—ஆனால் அதே போது, இந்த 'விவரம்' தெரிந்திருப்பது அவர்களின் போராட்ட உணர்ச்சியை நிச்சயமாகத் தடைபடுத்தித் தான் தீரும்.

தானறிந்த வைத்திய முறைப்படி, நடக்க விரும்பிய வைத்தியர், காய்கறி வாங்கக் கடைவீதி சென்று, வெறுங்கையோடு வீடு திரும்பினார். மனைவி, ஏதும் வாங்கிவரக் காணோமே? ஏன்? என்று கேட்க, வைத்தியர், "பெண்பாவாய்! கடைவீதியில், கத்தரி கண்டேன், அது சூடு—ஆகவே ஆகாதென விட்டேன், தண்டுகண்டேன். கொள்ளோ

மெனில் நீ காலையில் துர்மினது என் காதில் வீழ்ந்தது—எனவே, தண்டு, நீர் கோர்க்கும் என அதனையும் விட்டேன்" என்று துவக்கி, இன்னின்ன கறி, இன்னின்ன கெடுதி செய்யும் என்று விவரம் கூறி, எனவே கடைவீதியில் எந்தக் கறியும் இல்லை, என்று முடித்தாராம். அம்மையார், தன் அருமைக் கணவனின் அசட்டுத்தனத்தைக் கழுவக் கொஞ்சம் கண்ணீர் வடித்து நின்றாள்.

அக்கதைபோல், N. G. O. க்கள், அறிந்த விவரங்கள், அவர்களின் அச்சத்தை அதிகப்படுத்தவே உபயோகமாகி இருக்கும். போராட்ட சக்தியைச் சரியவைத்த முதல் எதிர்ப்புச் சக்தி இது.

இந்த விவரமறிந்தவர்கள் தோற்றதற்கு இதனைக் காரணமாகக் கூறலாம். ஆனால் இது வேதனை காரணம் என்றால், இல்லை என்று கூறுவோம். ஏனெனில், விவரம் தருகிற விசாரம் கூடக் கிடையாது, B & C மில் தொழிலாளர்களுக்கு. அவர்கள் போராட்டம், சாமான்யமானதல்ல! பதினாயிரக் கணக்கு! பட்டினிப் பட்டாளம்! சிறைக்கும் வீட்டுக்கும் வித்யாசம் அற்ற வாழ்வினர்! உலர்ந்த மார்பினர்! அவர்கள் உயிருக்குத் துணிந்து போராட்டம் நடத்தினர்—ஒரு மாத காலத்திற்கு மேல் — ஆனால் — தோற்றனர். தலைமை வகித்து நடத்தியவர்கள், சட்டத்தின் சகதியைச் சதாகாலம் மனனம் செய்து, அதன் பயனாக, விளைவுகளின் விவரம் தெரிந்த, ஜெகதீச ஐயர்களல்ல. உலகப் புரட்சிக்கு வித்தூன்றிய டிராஸ்ட்கியின் வழியைப் பின்பற்றுபவர் என்று கூறப்படும் அந்தோனிப் பிள்ளை என்ன, நாட்டவரைத் தமது பாட்டு மொழியால் தட்டி எழுப்பி, வீட்டையும் மறந்து போராட்டப் பாதையிலே செல்லவைக்கும் திறம் படைத்த, திரு. வி. க. என்ன—இப்படிப்பட்டவர்கள். N. G. O. க்களின்குறைபாடுகள் பொதுமக்கள் செவிக்குச் சற்று எட்டிற்று, அவர்கள் பிரசாரம் செய்து அல்ல—அவர்களைப் பற்றிக் காங்கிரசார் செய்த எதிர்ப்பிரசாரத்தின் மூலம்—ஆனால் B—C, மில் தொழிலாளர்களின் குறைகள், பொதுமக்களுக்குப், பலப் பல மாபெருங் கூட்டங்கள் மூலம் எடுத்துக் கூறப்பட்டது. எனினும் அந்த வேலை நிறுத்தம் தோற்றுத்தான் போயிற்று.

டிராஸ்ட்கிய வழி இவ்விதம் இடர்ப்பாடே தரும் — ஸ்டாலின் வழியே சிறந்த வழி—வெற்றிப் பாதை—என்று கூறுவர் சிலர். ஆனால், அந்த வழியும், சென்று பார்த்தனர்—வெற்றி இல்லை.

நாடு குமுறும் அளவு நடைபெற்ற, ரயில்வேத் தொழிலாளர் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள், கம்யூனிஸ்டு நண்பர்கள். வெற்றி இல்லை! துரைத்தனத்தார், துப்பாக்கி மூலம் பேசினர்!!

கோவையிலே, மதுரையிலே, பல்வேறு இடங்களிலே நடைபெற்ற ஆலைத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களும், தோற்றுத்தான் போயின.

உழவர் போராட்டம், ஆலைத் தோழர்கள் போராட்டம், தோற்றன. அவர்கள், புரட்சிப் பொறிகள்—அந்தப் பொறிகளையே அணைத்த சர்க்கார், 'விதிகள்—உபவிதிகள்' தயாரிக்கும் நண்பர்களின் போராட்டத்தைத் தோல்வியுறச் செய்தது, ஆச்சரியப்படக் கூடியதல்ல.

இவ்வளவு கிளர்ச்சிகளை, திறம்பட (! ?) ஒடுக்கிய சக்தியின் தன்மையை அறிந்தால் தான், இந்தத் தோல்விகளின் உட்பொருளும், உண்மைக் காரணமும் விளங்கும்.

தோற்ற, ஒரு கிளர்ச்சியாவது, தக்க காரணமில்லாமல் துவக்கப்பட்டதல்ல,—வீம்புக்காகக் கிளம்பியதல்ல.

போரின் காரணமாக, விலைவாசிகள் விஷமென ஏறி, வாழ்வை வதைக்கத் தொடங்கவே, பாட்டாளி மக்களும், நடுத்தர வகுப்பினரும், மிக வேதனையுற்றனர். மேட்டுக் குடியினர், தங்கள் இலாப வேட்டையில் மும்முரமாக ஈடுபட்டுக்கொண்டு, பணத்தில் புரண்டனர்.

இந்தச் சூழ்நிலையில், உழவர் உள்ளம் குமுறுவதும், ஆலைத் தோழர்கள் ஆர்ப்பரிப்பதும், நடுத்தர வகுப்பினர் நியாயம் கேட்டுக் கிளர்ச்சி செய்வதும், வீம்பு ஆகாது—வேதனைக் குறிகள் அவை.

வேலை நிறுத்தம், பொழுது போக்கல்ல—ஆபத்துக்குத் தாமாக அச்சாரம் தரும் அளவு துணிவு பிறந்த நிலைமை—அந்தத் துணிவு, தாங்க முடியாத வறுமையின் விளைவு.

மஞ்சள் பெட்டியினருக்கு மருடம் சூட்டுவதற்கு முன்னாளவரை, இந்தக் கோரிக்கைகள் பற்றி, அவர்கள், கசிந்து கண்ணீர்பல்கி இருக்கின்றார்கள்.

உழவுக்கும் தொழிலுக்கும் வஞ்சனைசெய்வோம்—என்று பாடவில்லை. வந்தனைசெய்வதாகவே வாக்களித்தனர்.

தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று கர்ஜித்தனர்.

வேலைநிறுத்தங்கள், சத்யத்தின ஜுவாலை என்றுசித்தரித்துக்கூறினர்.

போராடுங்கள்! போராடுங்கள்! வெற்றிகிட்டும்வரை போராடுங்கள்! என்று உபதேசித்தனர்.

நாட்டிலே நல்லாட்சி இருந்தால், உழவரும் தொழிலாளரும், இவ்விதம் வதைவரோ? என்று பேசினர்.

இன்றும், வேலைநிறுத்தம் இல்லாத நேரத்திலே, அவர்கள் பேசும்போது தொழிலாளர் நலனைப்பற்றியும், முதலாளித்வத்தை முறியடிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், வலியுறுத்தாமலிருப்பதில்லை.

கிடைத்துள்ள சுதந்திரம் ஒரு சிலருக்குச் சுகவாழ்வு அளிக்க அல்ல—நாட்டு மக்கள் அனைவருக்கும், நலன் கிடைக்க—என்று சுதந்திரத்தின் தத்துவார்த்த விளக்கத்தைத் தவறாமல் கூறுகின்றனர்.

ஆகவே, வேலைநிறுத்தக்காரர்கள், வயற்காட்டு வேலன் முதற்கொண்டு செகரடேரியட் ஜெகதீசர்கள்வரையில், யாரும், தக்ககாரணமின்றி கிளம்புபவர் என்று கூறவோ, அவர்களின் வாழ்வு குறையற்றதாகஇருப்பதாகவோ, கூற முடியாது.

குறை உள்ளது, கோரிக்கை நியாயமானது என்பதை, யாரும் மறுப்பதில்லை—ஆள்பவர்கள் உட்பட.

அந்தக்குறைகளைத் தீர்த்துக் கொள்ள, பாட்டாளி மக்களிடம் உள்ள ஒரே ஆயுதம், வேலைநிறுத்தந்தான் என்பதையும், அவர்கள் மறுத்ததில்லை.

அந்த வேலைநிறுத்தத்தை ஏகேச்சாதிகாரிகளே, அடக்குமுறை கொண்டு முறியடிக்கத் துணிவர்—மக்களாட்சி மலருமானால், அந்த வேலைநிறுத்தக்காரர்களின் குறை

(17-ம் பக்கம் பார்க்க)

# பணமும்—பஞ்சையும்

"நீ, ஏராடித்துக் கிடக்கவேண்டிய பஞ்சை! உடற்கூடு நொருங்க நீ, உழைக்கவேண்டியதே உன் கடமை! இதை–இந்தக்கிதையின் கட்டளையை மறந்து, மகாராஜர்களோடு சமதையாக ஆய்விடலாம் என்று, கனவா காண்கிறாய்?"

"சுவாமிஜி! நமஸ்தே! கோபிக்காதீர்கள். இங்கு நாங்கள் பரம்பரை பரம்பரையாகப், பயிரிட்டு வாழ்ந்து வருகிறோம். இந்த இடத்தைக்காலி செய்யுங்கள் என்று எங்களை மிரட்டினால் நாங்கள் எங்கு போவது? பாடுபடாது பயன்தரும் பூமியாயினும், நாங்கள் பிறந்த இடத்தைப் பிரிந்து வாழ்வதென்பது, ஆகக்கூடிய காரியமா சுவாமிஜி! அதற்கு எங்கள் மனம் இடந்தராதே! மன்னியுங்கள்."

"ஏதற்கடா இந்தச் சாதனை? எவனடா செய்தான், உங்களுக்கு இந்த போதனை? மேலும் வசவழைத்துக் கொள்ளாதீர்களடா வேதனை! மறுவார்த்தை பேசாமல், இந்த இடத்தைவிட்டு விரைவில் விலகுங்கள். வீண்தொல்லையை விலைக்கு வாங்காதீர்கள்."

"சுவாமிஜி! கோபிக்காதீர்கள். உங்கள் உத்தரவை, ஊராள்வோரிடம் முறையிடுகிறோம். எங்கள் கோரிக்கை சத்தியமானது. ஆண்டவன் எங்கள் பங்கில்தான் இருப்பான்."

"மூடர்களே! முடிந்ததைப்பாருங்கள். இந்த மந்திரிமார்கள் எங்களுக்குத் துணை நிற்கிறார்களா? அல்லது உங்களுக்குச் சலுகை காட்டுகிறார்களா? பார்த்துவிடுகிறோம் இதனை. எங்களிடத்திலே லட்சுமி வாசம் செய்கிறாள். நாங்கள் லட்சுமி புத்திரர்கள். வான் பருந்தைச் சிறு புள் பகைத்து வாழ்வதா? பார்த்து விடுகிறோம் ஒருகை!"

இவ்வாறுதான் பேச்சு நிகழ்வது வழக்கம், பணம் படைத்தவர்களுக்கும், பஞ்சைகளுக்கும். பணத்திமிர், முன்னவர்களை அவ்வாறு பேசவைக்கிறது, மனிதர்களை மதிக்காது. தர்மம், சத்தியம் அவர்களுக்கு வெறும் பழஞ்சோறு. பிறருக்கு உபதேசிக்க இருக்கும் அருமையான சாதனங்கள்.

ஏழைக்கோ, தன் பலம் தெரிவதில்லை. தெரிந்தாலும் ஏற்படுத்தப்படும் கொடுமைகளிலிருந்து மீள மார்க்கம் புலனாவதில்லை. அவ்வளவும் சாத்தியமானாலும், நினைத்ததை முடிக்கும் வரையில் நிலைகுலையாத நெஞ்சுறுதியும், போதிய வசதியும், ஒன்றுபட்ட உள்ளமும் இருப்பதில்லை.

'இந்த அக்கிரமக்காரர்களுக்கு ஆண்டவன் தான் கூலிதர வேண்டும்; எரிந்து போகிற சூரிய பகவான் தான் அவர்களைக்கண்திறந்துபார்க்க வேண்டும்' எனச் சபித்துவிட்டு—பிடிமண்ணை அள்ளி வீசிவிட்டு—வேறு வேலையில் நாட்டஞ் செலுத்துவர். அவர்களுடைய சீற்றும், வேதனையைத் துடைத்துக்கொள்ளத் தேடும் பரிகாரம்–இத்துடன் நின்றுவிடும். அவர்களும் மனச்சாந்தி பெற்று விடுவர். பலகாலமாக இந்தப் போக்கிலேதான், இருப்போரும், இல்லாதோரும் இருந்து வருகிறார்கள் இந்த நாட்டில். இன்றில்லையாயினும், எதிர்காலத்தில் இந்நிலை மாறியே தீரும், அதில்தான் மக்கள் வாழ்வு மறைந்து கிடப்பதால்.

குஜராத்தில் வால்சாத் எனும் தாலூக்காவில், ஒரு தொழிற்சாலை ஆரம்பமாக இருக்கிறது. அடுல் புராடெக்ட்ஸ் என்பது அந்தத் தொழில் ஸ்தாபனத்தின் பெயர். பூசும் வர்ணம், சாயவர்ணம், மருந்து வகைகள் முதலியன அதில் தயாரிக்கப்படும் பொருள்கள் ஆகும்.

அதன் சொந்தக்காரர்கள் யார் தெரியுமா? அந்தப்பட்டியல், இதோ.

கஸ்தூரபாய் லால்பாய், ஆமதாபாத் ஆலை அரசர்.

நாரோட்டமதாஸ்லால்பாய், முன்னவர் உடன் தோன்றல்.

தைருபாய் புலாபாய் தேசாய், காலஞ்சென்ற புலாபாய் தேசாயின் புதல்வர், முன்னாள் பம்பாய் மாகாண காங்கிரஸ் தலைவர்.

தர்மசே காட்டா, பம்பாய் ஆலை அரசர்.

ஷினாய், மற்றொருபம்பாய்சீமான்.

பிர்லா, நாடறிந்த நல்லவர்.

மேல்கூறியவர்கள் தான், இந்த ஸ்தாபனத்தின் பங்காளிகள். இவர்களோடு மட்டும் விஷயம் தீர்ந்துவிடவில்லை. இந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சியையும், உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் நேர்த்தியையும் மேல் பார்ப்பதற்காக, அமெரிக்காவிலுள்ள சினமிட் கம்பெனி முன் வந்திருக்கிறது. அதாவது, பம்பாய்ப்பணமூட்டைகளுடன், அமெரிக்க பணமூட்டைகளும் பங்கு கொள்ளுகின்றன. இம்முறையில் இந்தியத் தொழில் வளருகிறது!

இத்துடன் நின்றுவிடவில்லை, இப்பணம் பண்ணும் பணி. இது, மேலும் நீளுகிறது. ஆரம்பத்திலேயே, ஏழை எளியவர்கள் கழுத்தைப் பிடிக்கும் பெருஞ்செயலில் முனைந்துள்ளது.

இந்த ஸ்தாபனக் கட்டிடத்திற்கு இடம் வேண்டி இருக்கிறது. காடு மேடாக இருக்கிற இடம், அந்த நிர்வாகிகளுக்குப் பிடிக்கவில்லை. பச்சைப் பசேலெனப் பயிர் ஏறும் நிலமாகப் பார்த்துப், பலவித தானியங்கள் தரும் பக்குவமுடைய பகுதியாகப் பார்த்து, கட்டிடம் கட்டத் தீர்மானித்துவிட்டனர். சுமார் 125 குடும்பத்தினர் அங்கு பயிரிட்டுப் பல காலமாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களை, நிலத்தை விட்டு வெளியேற்ற முயற்சிக்கிறார்கள் இந்த புண்ணிய புருஷர்கள்.

இதுகண்டு, ஏழை உழவர்கள், பம்பாய் மந்திரிமாரிடம் முறையிட்டுக்கொண்டுள்ளனர். தொழிற்சாலைக் கட்டிடத்திற்கு வசதியான வேறு இடம் அங்கு இருப்பதாகவும், அதுவும் தொழிற்சாலை மானேஜிங் டைரக்டரான தைருபாய் தேசாயின் சொந்த நிலமே அதற்குத் தகுதியானதென்றும், உழவர்கள் கூறியுள்ளனர். மேலும், சாகுபடி செய்யப்படாத பல ஜமீன்தாரர்களின் நிலம் அங்கு அருகாமையிலேயே இருப்பதாகவும் சொல்லுகிறார்கள் உழவர்கள்.

முடிவு தெரியவில்லை. ஆனால் உழவர்கள் முறையீட்டைக் கேட்டு மானேஜிங் டைரக்டரான தைருபாய் தேசாய், 'உங்கள் வழக்கைக் கூறினீர்கள், அதுபோல் நாங்களும் எங்கள் வழக்கைக் கூறியுள்ளோம், யார் வெற்றி பெறுகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்' எனப் பதில் அளித்துவிட்டார்.

டைரக்டருக்கும், உழவர்களுக்கும் நடந்த பேச்சு எவ்வாறு இருக்கும் என்பதைத்தான் உரையாடலாக எழுதி இருக்கிறோம். விவசாயிகளோ இடத்தைக் காலி செய்வதில்லை எனும் முடிவில் இருக்கிறார்களாம்.

# திருவாங்கூரில் தமிழர்?

[எஸ். கே. சாமி]

"திருவனந்தபுரம் சர்வகலாசாலையில் தமிழில் பிரசங்கம் செய்யக்கூடாது; எவ்வளவு மேதாவியாயிருந்தாலும் தமிழனுக்கு வரவேற்பு அளிக்கக்கூடாது" என்று மலையாளிகள் ஆர்ப்பாட்டம் செய்துவரும் நிலைமையில் தமிழர் மீதும், தமிழ்மொழி மீதும் மலையாளிகளுக்கு துவேஷம் வளர்ந்துவிட்டது. திருவாங்கூரில் சுமார் 15 லட்சம் தமிழர்கள் சமஸ்தான சர்க்கார் சென்ஸஸ் கணக்குப்படி இன்று வாழ்ந்து வருகிறார்களென்பதும், இந்த எண்ணிக்கை சமஸ்தானத்தில் வாழும் மொத்த ஜனத்தொகையில் கால் பாகம் என்பதும் கவனிக்கத்தக்கது.

தமிழர் உரிமைகளைப் பாதுகாக்கவும், அது சம்பந்தமாகக் கிளர்ச்சி செய்யவும் நாகர்கோவிலில் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஸ்தாபனத்தில எல்லாத் தமிழர்களும் சேர்ந்து உழைத்து வருகிறார்கள். பதவி வேட்டை ஆசாமிகள் சிலர் மலையாளிகளின் உறவை நாடி கோடரிக் காம்புகளாக இருப்பதை மலையாளிகள் பயன்படுத்திச் சென்னையிலுள்ள தமிழ் மந்திரிகளில் சிலரை ஏமாற்றி வருகிறார்கள். திருவாங்கூரிலுள்ள தமிழர் பிரச்னை இந்த அமைச்சர்களின் பார்வையில் படாதது விந்தையிலும் விந்தையே!

திருவாங்கூர்சமஸ்தானத்திலுள்ள சமஸ்தான காங்கிரஸைத்தான் சென்னையிலுள்ள பெரிய தலைகள் மதித்து வருகிறார்கள். சமஸ்தானத்தின் மிகப் பெரிய மெஜாரிட்டியரான மலையாளிகளே இந்தச் சமஸ்தானக் காங்கிரஸில் முக்கியமானவர்கள். ஆதியில் இதில் பெருவாரியாகத் தமிழர்கள் சேர்ந்துழைத்தார்கள், போராடினார்கள், தடியடி பட்டார்கள், சத்தியாக்கிரகம் செய்தார்கள், சிறைவாசம் அநுபவித்தார்கள். பொறுப்பாட்சி கிடைத்தது. உடனே மைனாரிட்டி வகுப்பினரான தமிழர்கள் வெளியே எறியப்பட்டார்கள். தமிழரின் நியாயமான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்ட தமிழர்கள் ஒதுக்கப்பட்டார்கள். அலட்சியப்படுத்தப்பட்டார்கள். இக்கூட்டத்திலொருவர்தான் இன்று திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸின் தலைவர் திரு நத்தானியல் பி. ஏ. பி. எல். இவர் சமஸ்தான காங்கிரஸில் சேர்ந்து போராடியதற்காகச் சிறைத்தண்டனை பெற்றவரென்பது குறிப்பிடத்தக்கது. மலையாளிகளின் உறவு ஆபத்தானது என்று கண்கூடாகக் கண்டறிந்த பின்னர், அதைவிட்டு விலகி திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸை நிறுவியதற்கு மூலகாரணமானவர் தோழர் நத்தானியல்தான்.

டிசம்பர் மாதம் 17-ந் தேதியன்று கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு திருவனந்தபுரம் சர்வகலாசாலைத் தமிழ் மாணவர்கள் வரவேற்பு கொடுக்கத் தீர்மானித்திருந்தார்கள். இதற்காகச் சுமார் $2\frac{1}{2}$ வருட காலமாக அவர்கள் பாடுபட்டு வந்தார்கள். தமிழர்பிரச்னை சம்பந்தமாக கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் 15-12-47ல் அங்கு சென்றார். தமிழ்ப்பிரமுகர்கள்பலர் கலைவாணரை விமானநிலையத்தில் வரவேற்றுபசரித்தார்கள். திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, கவிக்குயில ஆசிரியர் தோழர் சிதம்பரம் முதலிய முக்கியமானவர்கள் கலைவாணரைச் சந்தித்துத் தமிழர் பிரச்னையைப் பற்றிப் பேசினார்கள். இதைக் கண்ட மலையாளிகள் மனம் புழுங்கினார்கள். ஒரு தமிழனுக்கு இவ்வளவு வரவேற்பா என்று ஏங்கினார்கள். இதன் பலன் என்ன?

17—12—47-யன்று நடக்கவிருந்த சர்வகலாசாலை வரவேற்பைத் தடைசெய்ய வேண்டுமென்று முடிவுகட்டினார்கள். திருவனந்தபுரம் சர்வகலாசாலை மலையாளமாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். தமிழில் யாரும் சர்வகலாசாலையில் பிரசங்கம் செய்யக்கூடாது என்று அட்டகாசம் செய்தார்கள். அப்படிச்செய்தால் உயிரைக்கொடுத்தும் அதைத் தடைசெய்வோமென்று ஆர்ப்பரித்தார்கள். திருவனந்தபுரம் சர்வகலாசாலையில் மொத்தம் சுமார் 2000 மாணவர்கள் படிக்கிறார்கள். அவர்களில் சுமார் 70 பேர்கள்தான் தமிழ்மாணவர்கள். ஆனால் தமிழ்மாணவர்கள்விடவில்லை. திருவனந்தபுரம் நியூதியேட்டரில் கலைவாணருக்கு வரவேற்புக்கொடுத்தார்கள்.

நிலைமை இவ்வளவுதூரம் மிஞ்சியிருக்கிறதென்பதைத் தமிழ் நாடு காங்கிரஸ்தலைவர் காமராஜநாடார் அவர்கள் அறியவில்லை. இவர் சமீபகாலத்தில் திருவாங்கூரிலுள்ள தமிழர்களுக்குத் தமிழ் எழுதப்படிக்கத் தெரியுமா? என்று கேட்டாரென்பதை நேயர்கள் மறந்திருக்கமுடியாது என்று எண்ணுகிறேன். சென்னையில் ம. பொ. சி. தலைமையில் நடைபெற்ற தமிழரசு மகாநாட்டில் இதுபற்றித் தோழர் காமராஜநாடார் முன்னிலையில் எடுத்துரைத்து, திருவாங்கூரில் வாழும் 15-லட்சம் தமிழர்களுக்காக உழைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்விளைவுதான் காமராஜநாடார் திருவாங்கூருக்கு விஜயம் செய்தார் என்று எண்ணுவதில் தவறில்லையல்லவா! எப்படியாவது இருக்கட்டும்! அவர்போனதற்கு நன்றி. திருவாங்கூரைச் சேர்ந்த "மனோன்மணியம்" காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, இசைச்செல்வர் இலக்குமணபிள்ளை, கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, ஆகியோர்கள் தமிழில் மகாபெரிய அறிஞர்களென்பதை அறியாத காமராஜநாடார் அவர்களை நாம் குற்றம் சொல்லவில்லை. ஐயா, போனதும் போனாரே! பட்டம் தாணுபிள்ளையின் விருந்து சாப்பிட்டுவிட்டு ஒன்றும் பேசாது எல்லோர்க்கும் நல்லபிள்ளையாகத் திரும்ப எண்ணி விஷயத்தைப் படுமோசமாகச் செய்துவிட்டுச் சென்னை வந்துசேர்ந்து மௌனமாயிருக்கிறார்.

இன்று மலையாளிகள் நிறைந்த சமஸ்தான காங்கிரஸ் தமிழர்களைப் பல துறைகளிலும் துன்பப்படுத்தி வருகிறது. இன்று திவானாயிருக்கும் உண்ணித்தன் அவர்கள் பட்டம் தாணுப்பிள்ளையின் கைப்பாவையாக விளங்குகிறார். அன்றொரு காலத்தில் பட்டம் தாணுபிள்ளையவர்கள், இன்று திவானாயிருக்கும் உண்ணித்தான் அவர்களின் ஆசிரியராயிருந்தவர். அதனால் மாணவனுக்கு அழகு ஆசிரியர் சொற்படி நடப்பது தானே!

சமஸ்தான காங்கிரஸ் தலைவர் பட்டம் தாணுப்பிள்ளை அவர்களின் மனைவியார் திருவாங்கூர் அரசாங்கத்தில் உத்தியோகம் வகிக்

(16-ம் பக்கம் பார்க்க)

# கோட்டை சரிகிறது

—*—

அவள் அழகிதான்; ஆனாலும் கோமகள் அல்ல. செல்வச் சிறப்புண்டு; இருந்தாலும் அரசகுடும்பத்தவள் அல்ல.

அவளை மணக்க அவன் விரும்பினான். காதல் கொண்டான். கருத்து ஒருமித்தான். இருந்தாலும்என்ன?

அவன் அரசர்க்கரசன், அரசர்குலம், சாம்ராஜ்யாதிபதி-சர்தாரண குடிப்பிறந்த சாமான்யளை எவ்வாறு மணப்பது?

நீண்டகாலப் பழக்கம் நெடுமலை போல் குறுக்கே இருக்கிறது. அது இடங்கொடுக்காது; அரசன் இஷ்டம் போல்நடக்க நாட்டுச்சட்டமும் சம்மதம் அளிக்காது.

மக்கள் விரும்பார் இம்மன்னனின் போக்கை. பாராளுமன்றம், எதேச்சாதிகாரப் போக்கிற்குத் துணை நிற்காது. காதலியைக் கைவிடவேண்டும்-அப்போதுதான் மணிமுடி மன்னனுக்கு உண்டு. இல்லையேல், இச்சைப்பட்டவளை ஏற்றுக்கொண்டு இன்பபுரியிலே வாழலாம்.

இரண்டில் ஒன்றுதான் நடைபெற வேண்டும். இரண்டிற்கும் ஏககாலத்தில் இடமில்லை. நாடாள்வோர் நவின்றனர் இதனை.

நடந்ததென்ன?

முடிதுறந்தான்; மனதுக்கிசைந்த மங்கையை மணந்தான். உரியவனை விலக்கி, உடன்பிறந்த இளையவன் தலை, மணிமுடி சூடுவது கண்டு, பெற்றதாயே இரண்டொரு சொட்டுக் கண்ணீர் விட்டாள். தாயின் வாஞ்சை, தவறான போக்கென மக்கள் மன்றத்தினர் கொடுத்த தீர்ப்பை, தட்டிக் கழிக்கும் தகுதி பெற்றிருக்கவில்லை.

சொல்லளவில்தான் மண்டலாதிபதி, ஆளும்உரிமையோ மக்கள்கையில். கட்டளையிடுவது, நாட்டைக் காப்பது, நல்வாழ்வு நலகுவது மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பேயன்றி, பார்வேந்தன் பணியன்று.

தெய்வத்தின் திருவுருவம் தான், எனினும் தீமைதரும் சித்தாந்தம்பேசி, மக்கள் எழுச்சிகண்டு அடக்குமுறை வீசி, தன்பீடத்தின் பெருமையைக் காக்கச் சிலபல கொடிய முறைகளை மேற்கொண்டு, நாடாண்ட தீயவனின் தலையை வெட்டிவீழ்த்தியும், மற்றொருவனை நாட்டை விட்டே விரட்டியடித்தும், பெற்ற உரிமை உணர்வின் பயனாகத்தான், அங்கு மன்னர் இருந்தும், ஆளும் உரிமை மக்களிடம் இருக்கவும், அதற்குக் கட்டுப்பட்டு மன்னர் நடக்கவும் ஆன உயர்ந்த கோட்பாடு நிலைத்து நிற்கிறது.

மக்கள் வழி அந்தமன்னரே யன்றி, மக்கள் விருப்பத்திற்கு மாறாகத், தம்சொந்தவிருப்புவெறுப்புகளை மக்களிடம் புகுத்த, மன்னனுக்கு அதிகாரம் இல்லை. எனவேதான் அங்கு, மன்னர்முறை ஆட்சிக்கு எதிர்ப்பு இல்லை. அதனைஓர் பிரச்னையாகப் பேசுவோரும் இல்லை. தங்கள் வாழ்வில் தலையிட ஆதிக்கமில்லாத அரசனிடம், மக்கள் அன்பாயிருப்பதில் வியப்புமில்லை.

இந்த மக்களுக்குள்ள உரிமையை, பலபல தொல்லைகளுக்குப் பின்னர் பெற்ற பேற்றை, இழக்கத்துணியாது இருப்பு மனத்தினராய்இருந்து விட்ட காரணத்தால் தான், எட்டாவது எட்வார்ட் அரசன் அமெரிக்க மாது சிம்சனை, மணிமுடியோடு மணக்க முடியாது, முடியிழந்து காதல் வாழ்வு பெற்றான். மக்கள் உரிமை நிலைநாட்டப் பெற்றது.

இங்கிலாந்திலுள்ள மன்னர்முறை ஆட்சிக்கும், உலகின் மற்றப் பகுதிகளிலுள்ள மன்னர் முறைக்கும் எவ்வளவோ ஏற்றத் தாழ்வுகள் உண்டு. ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே முடியாது.

மற்ற இடங்களில் பெயரளவில் தான் மக்கள் ஆட்சி இருந்தது—இருக்கிறது. பெரும்பாலான மன்னர்கள் ஏதேச்சாதிகாரிகளாகவே வாழ்ந்தனர். மக்கள் நலத்தைப் பேணாது, சொந்தநலமே முக்கியமெனக், காமக்களியாட்டிலும் வெறியாட்டிலும் காலங்கழித்து வந்தனர். இவர்களில் பலர் மறைந்தனர், பற்பல காரணங்களால்.

சென்ற போர்நிகழ்ந்த காலை, ஹிட்லரின்படையெடுப்பின் பலனாக, மாடமாளிகைகள் மண்மேடாயின; தொழிற்சாலைகள் தவிடுபொடியாயின; …ண்ண நகரங்களெல்லாம் கோர் உயிர் இழந்தனர். பலபகுதிகள் சுடுகாடாயின என்றும்கூடச் சொல்லலாம். நிலைகுலையச்செய்யும் கோரமான போர்தான்.

இருந்தாலும் போர் முடிந்த பின்னர், அதன்விளைவாக மக்கள்பெற்ற புதுவாழ்வைக் குறைவாக மதிப்பிடுவதுகூடாது. கீழ்க்கோடி நாடுகளில் எழுந்த விடுதலைக் கிளர்ச்சி, சிலநாடுகளில் முழுவெற்றி யளித்தும், சிலவற்றில் வெற்றி தரும் நிலையேற்பட்டுள்ளதும் இதன் பலன்தான். ஆசிய நாடுகளில் வெள்ளை நிறத்தவர்களின், ஏகாதிபத்தியவாதிகளின், பிடி, மண்ணைக்கவ்வும் நிலையில் இருப்பதும் மறுக்கமுடியாத போரின் விளைவுகளாகும்.

கிழக்கு ஐரோப்பாவில் இது,மிகத் தெளிவாகத் தெரிகிறது. அங்கு மக்கள், உண்மையான மக்கள் ஆட்சி முறை வகுக்க, வீறுகொண்டுள்ளனர். பழைய அதிகார வர்க்கத்தை அண்டி வாழ்ந்து, மக்களை மண்ணாங்கட்டிகளாக மதித்து, மங்கையும் மதுவுமாகக்காலங்கழித்த, அரசியல் சூதாடிகள், தலை தப்பினால் போதுமெனும் முடிவிற்கு வந்து, இரவோடு இரவாக வேற்று நாடுகளுக்குப் பறந்துசென்று தஞ்சம் புகுவது இன்று சர்வசாதாரணமாகப் போய் விட்டது. இந்நிலைக்கு வேறு காரணம் கூறுவர், சிலபழமை விரும்பிகள். இருப்பினும், முன்னைய அமைப்பில் மக்கள் கொண்டுள்ள வெறுப்பும், புதுவாழ்வு பெற மக்கள் காட்டும் ஆர்வமுமே மூலகாரணமாகும்.

யூகோஸ்லேவியா நாட்டுமன்னன், இரண்டாவதுபீடர், முடிதுறந்தான் மக்கள் கட்டளையால். 1945ல், அங்கு புது அமைப்பு ஏற்படுத்த, அரசியல் ஆக்கக்குழு ஒன்றைத் தேர்ந்தெடுத்தனர் மக்கள். பிறர் தயவால்பெற்ற பேறு அல்ல அது. வீரச்சமர்புரிந்து, மலைக் களத்தில் பலியாக்கி, வீணன் கொட்டத்தை அடக்கி, பெறத்தகு சுதந்திரத்தைப் பெற்றனர் அவர்கள்.

அக்குழுவின் முதல் வேலை, குடியாட்சியை ஏற்று, மக்களுக்கும் மண்ணுக்கும் பாரமாக இருந்த இரண்டாவது பீடரை விலக்கினர். அவன் … காலாகல வாழ்விற்கு முடிவுகட்டினர். அங்கு மக்கள் முன்

னேற்றத்தைத் தடுக்க, அவனியில் இனி ஒரு சக்தியும் இல்லை. பேதா பேதமின்றி வாழ்வு கட்டும் வகையைத் தேடிக்கொண்டனர்.

அடுத்த ஆண்டே பல்கேரியா, இரண்டாவது சிமோன் அரசனுக்கும், சீட்டுக் கிழித்தனர் அரசன் ஆண்டியானான். மக்கள் மனம் குளிர்ந்தது.

முசோலினியின் கைப்பாவையாகக் காட்சியளித்துவந்த, குறியிட்ட இடத்தில் கைச்சாத்து இட்டுக்கொண்டிருந்த, இயங்கும் பொம்மை இத்தாலிய அரசன் மூன்றாவது விக்டர் எமான்யுவேல், காலத்தின் வேகத்தைத் தெரிந்து, மக்களின் கொதிப்பை அளந்து பார்த்து, முன்யோசனையாக முடியைத் துறந்துவிட்டான். அவனுடைய மகன் அம்பர்டோவும் வாரிசு பாத்யதையை இழந்தான். மக்கள் விருப்பப்படி, அங்கு குடியாட்சிக்கு வித்திடப்பட்டது.

மக்கள் விழிப்புணர்ச்சி, மன்னர்களை விரட்டியதுபோலவே, ஆதிக்க வெறியும், மன்னர்களுக்கு முடிவைத் தந்ததுண்டு. 1939-ல் அல்பேனியா எனும் ஒரு சிறு நாட்டின் மீது, குட்டிச் சர்வாதிகாரி முசோலினி படை எடுத்துச் சென்றதும், எதிர்த்து நின்ற அல்பேனிய அரசன் ஜாக், விரட்டியடிக்கப்பட்டான்.

இதைப் போன்று, ருமேனிய அரசன் இரண்டாவது காரோலும், ஹிட்லரின் வலைவீச்சில் விழமறுத்த காரணத்திற்காக, சந்நியாசம் கொள்ள வேண்டியவனானான். கடமை தெரியாத மன்னன், மக்கள் உரிமை இழந்து, பிடித்தவர்க்குப் பெண்டாய் ஆடி ஆடித்துக்கொண்டிருக்கும் நிலையிலும், காமவேள் சாலைக்குப் பாதையமைக்கும் பணியை மேற்கொண்டான். கன்னியின் கடைக்கண் பார்வைக்கு மயங்கி, ஹிட்லரின் கோபத்திற்கு ஆளாகி, நாட்டைவிட்டு வெளியேறி, அவனியெங்கும் அவனையேற்க மறுத்த காரணத்தால், இறுதியில் அமெரிக்காவில் தஞ்சம் புகுந்தான்.

அவன் மகனுக்கும் இன்று அரியாசனம் மறுக்கப்பட்டு விட்டது, அவன் மக்களால். இங்கிலாந்து இளவரசியின் திருமணத்திற்குச் சென்றான். அரசிளங் குமரிகள் பலரும் கூடி இருக்கும் இடத்தில், அந்த மரபில் தோன்றிய ஒருவனுக்கு, அவர்கள் நடையழகில் நாட்டஞ் செல்வதும், சடை அமைப்பில் சஞ்சலம் தோன்றுவதும், அணியிலும் ஆடையிலும் பார்வை படிவதும், இயல்புதானே? பழைய பிரஞ்சு அரசர் வழிவந்த, 24 வயதுடைய இளவரசி ஆன் மீது, மைக்கேல் மன்னனுக்கு மயக்கம் பிறந்தது. மணமுடிக்கும் விருப்பத்தைத் தன் குடும்பத்தினருக்கு அறிவித்தான் அரசன். விஷயம் வெளியாகவே ஆளும் அதிகாரம் கொண்டிருந்தவர்கள், 'உலக அரசியல் நிலவரப்படியும், நாட்டுச் செல்வ நிலைப்படியும், இம்மணத்திற்கு இதுவல்ல தருணம்' எனக் கூறிவிட்டனர். மக்களின் மனமாற்றத்தைக் கண்ட அரசன், போர்க்குணவல்லைக்காக முடிதுறப்பதென முடிவிற்கு வந்துவிட்டான். 30-12-47 முதல், குடியாட்சியும் நிறுவப்பட்டாய்விட்டது அங்கு.

மைக்கேலின் மகுடம் போனதற்கு மணத்துக்குகந்த மாது அல்லக் காரணம். அவனே விளக்கமாகக் கூறுகிறான்:—

“கடந்தச் சில ஆண்டுகளில் ருமேனியாவில் அரசியல், பொருளியல், சமூகவியல் ஆகியவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. அதற்கேற்பத் தேசிய வாழ்விலும் அடிப்படையான சில புதிய உறவு முறைகள் தோன்றி இருக்கின்றன. முடியாட்சி, இப்புதிய போக்குக்கு உடன்பாடுடையதல்ல; நாட்டு முன்னேற்றத்தையும் இது பாதிக்கக்கூடியது.”

அங்குள்ள, இன்றைய சூழ்நிலை முடியாட்சிக்கு ஏற்றதல்ல என்பதை மைக்கேல் நன்கு உணர்ந்துகொண்டுள்ளான் என்பது மட்டுமல்ல இதற்குக் காரணம். தலைதப்பினால் போதுமென்ற நிலையிருப்பதனால்தான், தலைப்பாகைப் போனால் போகிறது என்று ‘பெருந்தன்மையாக’ நடந்துகொள்ளும் துணிவு பிறந்தது.

இன்னும் பாலகன் பிரதேசத்தில் ஒரே ஒரு மணிமுடிதான் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. சொந்தப் பலத்தினாலும் அல்ல. உண்மையான மக்கள் அன்பினாலும் ஆதரவினாலும் அல்ல. அமெரிக்காவின் அனுசரணையினால், அங்கு பால் அரசர் சிம்மாசனத்தில் கெம்பீரமாக வீற்றிருக்க முடிகிறது.

நமது நாட்டில்!

வெட்கப்படவேண்டிய விஷயம். போரில் புறமுதுகிட்டவர்கள், மக்களை வெறும் மண்ணாங்கட்டிகளாக மதித்து நடக்கும் மாமிசப்பிண்டங்கள், காலத்தின் வேகத்தை அறியாத கனவான்கள், நீண்ட நாளைக்குத் தமது ஏகச்சாதிகார வாழ்வு நிலைத்திருக்குமென பகல் கனவு கண்டுகொண்டுள்ளனர். ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளாக இருந்த காரணத்தால் கிடைத்த பதவியை, மக்களிடம் ஒப்படைத்துவிட்டுவேறு வேலையைக் கவனிக்கவேண்டுமெனும் கண்ணியமானப் போக்கு அவர்களுக்குப் புலனாகவில்லை. சமீபத்தில் ஏற்படுமென நம்புவதற்கு இடம் இல்லை. சுயராஜ்யத்தில் அவர்களுக்கு இடமில்லை என்று, பார்அதிரப் பேசியவர்கள், பதவி பெற்றபின்னர், அவர்களின் பாதுகாப்பாளர்களாகப் போய்விட்ட நிலையில், இந்தக் கோலாகல இனபபுரி வாசிகள், எங்கு மக்களை மதித்து நடக்கும் மதியினைப் பெறப்போகிறார்கள்! புதிய பலம் கிடைத்தது எனும் பூரிப்பில், இதோ பாதுகாப்புப்படை இருக்கிறது பாருங்கள்—பதட்டமாக ஒன்றும் பேசாதீர் என்று அதட்டிக்கேட்கும் தன்மையில் ஆட்சி செலுத்தி வருகிறார்கள். மக்களுக்கு மேலும் விழிப்பேற்பட்டால்தான், இந்த மன்னர் சாமிகளுக்கும் மண்டைக்குத்தல் உண்டாக வழிபிறக்கும்.

நமது சொசைடியின் அபிவிருத்திக்கு ஆதரவளித்த
ஒவ்வொருவருக்கும்

**புதுவருஷ வாழ்த்துக்கள்.**

தமிழர் ஸ்தாபனத்தை ஆதரித்துத் தமிழர்களின்
கடமையை நிறைவேற்றுங்கள்

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரன்ஸ் சொசைடி லிமிடெட்,

**தமிழர் நிலையம்,**

கோயமுத்தூர்.

## கருத்துக்கினிய கீதம்

14-ம் பக்கத் தொடர்ச்சி

நாடாளும் உரிமை இருந்தும், மனைவியர் பலரிருந்தும் பிள்ளையில்லாக் குறையைப் போக்கிக்கொள்ளப் பிறவற்றின் தயவை நாடவேண்டிய நிலை தசரதனுக்கு உண்டானதற்கும், சுற்றுச் சார்புகளே காரணமாகும். செல்வர்கள் மனமாற்றத்திற்கும், காலப் போக்கிற்கும் மேற் கொள்ளும் சாதனங்களை, ஏழை பெற வழி செய்து கொடுப்பதோடு, அவன் உழைப்பையும் கொஞ்சம் குறைக்க மார்க்கம் தேடினால், கருத்தடைக்கு செயற்கை முறைகளைத் தேட வேண்டிய வேலையே இருக்காது. கிடைக்கும் ஓய்வில் உழைப்பாளி, உலகத்தை உற்றுப் பார்த்து, இன்பம் தரும் பொருள், மனைவி மட்டுமன்று, பறவையும், கானாறும், விண்மீனும் பிறவும் இன்பமூட்ட வல்லன என்று உணர்வான். அப்பொழுதுதான் இன்பம் பெறுவதற்கு வேறுபல சாதனங்களும் உலகில் உண்டு எனும் உண்மை அவனுக்குப் புலனாகும்.

தலைவியார், கூறும் கருத்தடைப் பயிற்சி பெரும்பாலும்கற்றவர்க்கும், பணம் படைத்த மற்றவர்க்குமே பயன் தரக் கூடியது. நடுத்தர வகுப்பினருக்கும் இப்போதனை அவசியமானதே. அன்றுதான், குடும்ப பாரம் ஓரளவிற்குக் குறைந்து அவ்வகுப்பிலுள்ளவர்களும், தாமது விடுதலை மற்றவர்கள் விடுதலையிலும் பிணைந்து கொண்டிருக்கிறது எனும் இயல்பை உணரவும், அதற்கான பணியை மேற்கொள்ளவும் ஒரு சந்தர்ப்பம் ஏற்படும். இம்முறையில் கருத்தடைப் பயிற்சி தேவையானதே.

இவ்வளவையும் அமுல் நடத்துவது யார்? அரசாங்கந்தான். மாகாணங்களிலும், மத்தியிலும் இதற்கெனத் தனி இலாக்காக்களும் அதற்கான அமைச்சர்களும் வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். மக்கள் முன்னேற்றத்திற்கு இதுநல்ல மார்க்கம். அதற்கான அதிகாரம்பெற்றவர்கள், மக்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தாத அளவில் தொண்டாற்றினால், மக்கள் முன்னேற்றம் விரைவில் கிட்ட வழி பிறக்கும்.

மனுவுக்குப் பிரிவுபசாரம் வாசிக்கு அளவிற்குச் சீமாட்டிகளுக்குத் துணிவு பிறந்திருப்பது விரும்பக் கூடியதேயாகும். அம்மாமிகளும் அதில் இடம் பெற்றுத்தான் இருந்தனர். ஆனால் அதில் நாம் கவனம் செலுத்தத் தேவையில்லை.

சுயமரியாதை இயக்கம் கடந்த இருபது ஆண்டுகளாக இப்பணியை, பலவித இடையூறுகளுக்கு இடையே செய்து வந்திருக்கிறது. மனுவை மாற்ற உங்களால் முடியுமா என்று வைதிகம் சீறிற்று. முன்னோர் முறைகளைக் குறை கூற நாம் யார் என நவின்றனர் சங்கராச்சாரிகள். தர்ம சாஸ்திரங்களை நிந்திக்காதீர் என, அதர்ம நூல்களின் ஆதாரங்களுடன் போருக்குப் புறப்பட்டனர் பலர். இன்று, நிலை, தலை கீழ் மாறி இருக்கிறது. எதிர்பாராத இடங்களில் எல்லாம், நமது பணி, தாக்குதலை உண்டாக்கி இருக்கிறது. நாம் எதனைத் தகர்த்தெறிந்தால், மக்கள் மக்களாக வாழ முடியும் என்று கூறினோமோ, அதே பேச்சுக் கொஞ்சம் கூட மாற்றமுறாமல், மற்றவர்களால் இப்போது பேசப்படுகிறது. நமது பேச்சுக்கு இருட்டடித்து மறைத்து வந்தவர்கள், இன்று அதே பேச்சு வேறு இடத்திலிருந்து கிளம்பும் காரணத்தால், அலங்காரத் தலைப்புகள் கொடுத்து, முக்கியமான இடத்தில் பிரசுரிக்கின்றனர். கொள்கை வெற்றி பெறுகிறது எனும் மகிழ்ச்சி நமக்கு ஏற்படுவதை அவர்களால் தடுத்து விட முடியாதல்லவா? இவைகளை நாம் கருத்துக்கினிய கீதமாகத் தானே கொள்ள வேண்டும்!

✲

## காஞ்சியில் நாடகம்

31–12–47-ல் காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீசில் "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற சீர்திருத்த நாடகம் சிறப்பாக நடைபெற்றது. தோழர் C. P இராசமாணிக்கம் அவர்களின் முயற்சியும், உள்ளூர்த் திராவிடர்கழகத் தோழர்களின் ஒத்துழைப்புமே இந்நாடகம் சிறப்பாக நடைபெறக் காரணமாக இருந்தது.

திராவிடர் கழகத் தலைவர் பெரியார் அவர்கள் நாடகத்திற்குத் தலைமை வகித்துச், சீர்திருத்த நாடகங்களின் அவசியத்தைப் பற்றியும், இத்தகைய நாடகங்களை நம்நாட்டில் நடைபெறும் சமுதாய இழிவுகளைப் போக்கக் கூடியன என்றும், விளக்கமாகவும் விரிவாகவும், ஆணித்திறமான மேற்கோள்களுடனும் ஒரு மணி நேரத்துக்கு மேலாகப் பேசி அனைவரையும் மகிழ்வித்தார்.

பின்னர், சென்னைத் "திராவிடன்" ஆசிரியர் N. V. நடராசன் அவர்களும் C. N. அண்ணாதுரை அவர்களும் பெரியார் அவர்கள் பேசிய சீர்திருத்தக் கருத்துக்களை ஆதரித்தும் பாராட்டியும் பேசினர்.

கழகத் தோழர்களின் சார்பில் ஒரு வெள்ளிக் கோப்பை தோழர் இராசமாணிக்கம் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

பிள்ளையார் பாளையம் திராவிடர் கழகத் தோழர்கள் தலைவர் பெரியார் அவர்களுக்கு ஒரு வெள்ளிக் கோப்பையைப் பரிசாக வழங்கினர்.

தோழர் C. V. M. அண்ணாமலை அவர்களின் நன்றி கூறலுடன் நாடகம் இனிது முடிவுற்றது.

✲

## பெண்கள் கண்டனம்

சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில், உணவுப் பொருள் கட்டுப்பாட்டை நீக்கினதற்குக் கண்டித்தும், மீண்டும் கட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டும், கள்ளமார்க்கெட்டையும், கள்ளத்தனமாக சேமிப்பவர்களையும் அடக்குவதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஒருதீர்மானம் நிறைவேறியுள்ளது. கடுமையான விவாதத்திற்குப் பின்னர் 93-பேர் சாதகமாகவும் 45-பேர் விரோதமாகவும் வாக்களித்தனர்!

## திறமையான நிர்வாகம்

"கண்ட்ரோல் ஒழிப்பினால், அரசாங்க அதிகாரிகளும் மற்றவர்களும் கையாண்ட தவறான முறைகளும் நீங்கி விடும்" என்று 'ஹிந்து' பத்திரிகையின் நிருபரிடம், பிரதமர் ரெட்டியார் குறிப்பிட்டார்.

## பழைய பல்லவி

சர்க்கரை ஏராளமாக இன்று கிடைப்பதாகவும், விலையும் மலிவாகக் கிடைப்பதாகவும் 20–12–47 மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியார் தமது பழைய பல்லவியையே பாடியுள்ளார்.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

"திராவிடநாடு" பார்சலைத் தபால் மூலம் பெறும் ஏஜண்டுத் தோழர்கள், இனிமேல் தங்கள் பார்சலைத் தபால் நிலையத்திலேயே (Delivery) பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்-

திராவிட நாடு

காஞ்சி] 4—1—48 [ஞாயிறு

# அளவதிகமானால்....!

பண்டு பலகாரங்களின் சுவையும், காய்கறி வகைகளின் மணமும், கனி வர்க்கங்களின் கவர்ச்சியும், இன்னின்ன முறையில் இருக்கும் என்று விரிவான முறையில் விளம்பரப் படுத்தப்பட்ட விருந்தில், எவர் கலந்து கொண்ட போதிலும், கொஞ்சம் கூடுதலாக உண்ண வேண்டுமென்னும் ஆசையே உண்டாகும். செரிமானம் ஆகாத அளவிற்குத் தின்றும் தீர்ப்பர். பின்னர் மருந்து தேடும் பணியிலும் ஈடுபடுவர். மருந்து எதிர் பார்த்த பலனை அளிப்பது என்பது, மருந்தின் வேகத்தையும் உட்கொண்ட உணவின் கடினத்தையும் பொறுத்திருக்கும். மருந்து பலன் தராது, உண்டவர் தீராப்பிணியாளாகி, இறக்கும் வரையில் வேதனை அனுபவிப்பதுமுண்டு. விருந்தில் இடப்பட்ட பொருட்களின் தோஷமல்ல இது. உட்கொண்டவர், அளவறிந்து உண்ணத்தவறியதின் காரணத்தால், ஏற்பட்ட அவதி.

நல்ல அமிர்தம், அளவு பேதத்தால்நஞ்சாக மாறிவிடுவதும்உண்டு.

இந்நிலை, இன்று இந்திய அரசியல் உலகிற்கு ஏற்பட்டுள்ளது. ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி அமைக்கும் பணியின் ஆரம்பக் கட்டத்தில் மொழிவழி மாகாணங்கள் அமையும் என்றும், மக்கள் நலம்பல பெறுவர் என்றும் உறுதி கூறப்பட்டது. மொழி ஆக்கம் பெறவும், தொழில் வளரவும், வறுமை விலகவும், செல்வம் பெருகவும், சிறப்பான முறையில், ஒவ்வொரு வட்டாரங்களிலும் ஆட்சி அமையும் என்ற, அப்பேச்சினால் மக்கள் நம்பிக்கை கொண்டனர். படைதிரண்டது. தடியடி, துப்பாக்கி வேட்டு, சிறைவாழ்வு எதுவும் மக்களின் விடுதலை வேட்கையைக் குலைக்கவில்லை. ஏகாதிபத்தியம் அடக்க அடக்க, நாட்டிலே எதிர்ப்புச் சக்திகள் முன்னிலும் வலுப்பெற்றது. ஏகாதிபத்தியம் சீர்குலைந்து, சினம் மறைந்து, பதட்டமான பேச்சுத் தொலைந்து, பசப்புமொழி புகலவும், சாகசம் புரியவும் ஆன தன்மை பெற்றுவிட்டதால், தரணியாளும் பொறுப்பை, விடுதலைப் போரை முன்னின்று நடத்தியவர்களிடம் ஒப்படைத்துவிட்டு முக்கியமான பொருளாதாரப் பிரச்னைகளைப், போருக்குப் பின்பலமாக இருந்த பெரியவர்களிடம் பேரம் பேசி முடித்துக்கொண்டுவிட்டது. இந்தத் திரை மறைவு நாடகம் எவ்வாறு இருந்தபோதிலும், அந்த நாளில் மக்களுக்குக் கூறிய வண்ணம், மொழிவழி மாகாணம் அமைக்க வேண்டுவதும், அமைத்தாகவேண்டுமென மக்கள் கோருவதும் குற்றமன்று. எதிர்ப்பார்ப்பது, அதற்கான முறையில் கருத்தை வெளியிடுவது, தவறுடைய செயல் ஆகாது. முன்னாள் கொடுத்த வாக்குறுதியை நினைவு படுத்துவதும், நேர்மையற்றதன்று. சில அவசரக்காரர்கள், மொழிவழி மாகாணக் கோரிக்கையை எடுத்துக் கூறுவதில், ஒன்றிரண்டு காரசாரமான சொற்களைக் கலந்துவிடவும் கூடும். இதனாலேயே, அவர்கள் விருப்பம் அநீதியானதென்றோ, அவர்களுக்கு நாட்டுப் பற்றுக் கிடையாதுஎன்றோபேசுவது பொருந்தாது.

இப்பிரச்னை விஷயமாக சாடை காட்டுவோரும், மனு சமர்ப்பிப்போரும், வெளிப்படையாக வாதிடுவோரும், போர் முகாம் அமைக்க முனைவோரும், இன்று ஒவ்வொரு மொழி வட்டாரங்களிலும் காணப்படுகின்றனர். இதனைப் பலரும் தெரிந்துகொள்ளும்வண்ணம், அந்த நாள் விடுதலைக் கிளர்ச்சியில் விளம்பரம் தாங்கிகளாக இருந்த 'ஏடுகள்' வெளியிட முன்வராது. இரண்டே வரியில், எவரும் பார்க்காத இடத்தில், பத்திரிகையின் ஓர் மூலையில் பிரசுரித்துவிடும். அவைகளைப் பொறுத்த வரையில், விடுதலைப் போராட்டம் முடிந்துபோன விஷயமாகும். தொழில் அரசர்களின் சுபநலத்திற்குப் பாதுகாப்புத்தேடி, சொந்தப் பத்திரிகைகள் அல்லவா அவைகள். எருதின்புண்காக்கைக்கு எவ்வாறு தெரியும்?

மொழிவழி மாகாணம் வகுக்கப்படவேண்டுமெனும் தீர்மானம் காங்கிரஸ் குறிப்பேட்டில் இருக்கிறது. இருந்தாலும், இன்று சிலரின் பேச்சு வேறு பாதையில் திரும்பி இருக்கிறது. காந்தியாரே பலமுறை இது பற்றி, முரண்படப் பேசியுள்ளார். இந்திய யூனியன் அரசில் தொழில் மந்திரியாக இருக்கும் டாக்டர் சியாம் பிரசாத் முகர்ஜி, சில நாளைக்குமுன் அலகாபாத்தில்பேசும் பொழுது, "மொழிவழி சிறு சிறு துண்டுகளாக்குவது, இந்தியாவின் அரசியல் ஒற்றுமை வளர்ச்சிக்குக் கேடுபயக்கும்; இதனால் தேசிய நலனுக்கும் முன்னேற்றத்திற்கும் சீர்குலைவு ஏற்படும்" என்று பேசியுள்ளார். அவர், வெளிக்குச் சொல்லப்படுவது போல, வெறும் ஹிந்து மகா சபையின் தலைவர் மட்டுமல்ல. தொழில் அரசர்களின் பின்பலத்தில் ஆட்சிபீடத்தில் இருப்பவராவார். ஆதலால் அவர் பேச்சை, அநாமதேயப் பேச்சாகத் தள்ளிவிடுவது கூடாது. எதிர்காலம் எவ்வாறு இருக்கும் என்பதற்கு, மொழிவழி மாகாணம் எவ்வாறு இனி உருவெடுக்கும் என்பதற்கு, இதுஒரு முன் அறிவிப்பேயாகும். இதே போன்று மற்றொரு அமைச்சரான காட்கில் அவர்களும், செல்லும் இடங்களிலெல்லாம், மாகாணப் பற்றுதல் கூடாது—தொழில் முன்னேற்றத்தையும், விவசாயவளர்ச்சியையும்மாகாணக்கண்கொண்டுபார்த்தல் கூடாது—எனவும் பேசிவருகிறார். மேற்குவங்காள பிரதமர் டாக்டர் கோஷ் அவர்களும், ஒரிசா பிரதமர் ஹரிகிருஷ்ண மேத்தாப் அவர்களும் அதே பல்லவியைப்பாடுவதில் முன்னணியில் உள்ளனர். இவ்வாறு இவர்கள் பேசுவதற்கு ஒன்றையே காரணமாகக் கூறுகிறார்கள். அதாவது, மாகாணப் பற்றுதலின் காரணமாக இந்தியாவின் அரசியல் ஒற்றுமைக்கு ஊனம் ஏற்பட்டுவிடும் என்று சொல்லுகிறார்கள். இதே தொனியில் தான், முன்னர் ஆண்ட ஏகாதிபத்திய அரசும் பேசிவந்தது' வெள்ளையர் சுரண்டலுக்குத் தான் இவ்வாறு பேசுகிறது ஏகாதிபத்தி

யம் என்று இதே தலைவர்கள் தான் முன்னர் கூறினர். இருசாராரின் பேச்சும் ஒத்திருக்கும் காரணத்தால் இதற்கு அடிப்படையில் வேறுவகாவது ஒற்றுமை இருக்கவேண்டும் மென்று எண்ணம் எவருக்கும் தோன்றும். அது என்ன?

நாம் கூறுவதைக் காட்டிலும், தியாகங்கள் பல புரிந்தும், ஷீமூர், அஷ்டி வழக்குக் கைதிகளைத் தூக்கி விடுவதை நிறுத்தி வெற்றி கண்ட வருமான, அனுசூயாபாய் காளே "இன்றுள்ள மாகாணங்களின் அமைப்பின் பலனாக, அனைவரிடத்திலும் பகைமையும், பொறாமையும், சந்தேகமும் வளர்ந்திருக்கிறது. உதாரணமாக, இன்று பம்பாயில் குஜராத்தியர்கள், மராட்டியர்களை இழிவாகக் கருதுகிறார்கள். குஜிராத்தியர்களுடைய பணபலத்தைக் கண்டு, மராட்டியர்கள், அவர்களை வெறுக்கிறார்கள்" என்று குறிப்பிட்டுள்ளார். தமது மாகாணத்திலும் மராட்டியர்களிடையேயும் — மகா கோசலத்தார்களிடையேயும் பகைமை உணர்ச்சி இருப்பதாகவும், அதனடியாக ஒரு சாரார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை, மற்றொரு சாரார் சந்தேகத்தோடும் வெறுப்போடும் பார்க்கிறதாகவும், அவ்வம்மையார் குறித்துள்ளார்கள்.

இப்பரந்த நாட்டின் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வசிக்கும் சிலருடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்குத் தான், மாகாணப்பற்றுக்கூடாது என்றும், மொழி வழி மாகாணம் உண்டாக்குதல் நல்லது அல்ல என்றும், இதனால் எல்லாம் இந்தியாவின் ஒற்றுமை சீர் குலையுமென்றும், பேசப்படுகிறது என்பதைத் தமிழ் நாட்டார் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். இவ்வாறு பேசுபவர்களின் எண்ணம் நிறைவேறுமா நிறைவேறாதா எனும் பிரச்னை இன்று அவ்வளவு முக்கியமானதுமல்ல. இதன் தன்மையையும், எவ்வாறு இது வளர்ச்சியடையும் எனும் பாங்கினையும், எதில் முடிவடையும் எனும் உட்கருத்தையும், நாம் முன்னரே அறிந்திருக்கிறோம்.

சத்தற்றஅதிகாரத்தைக்கொடுத்து மொழிவழி மாகாணங்கள் அமைப்பதற்கே, அவ்வாறு அமைப்பது ஆபத்தானது, அகண்ட இந்தியாவின் நன்மைக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியது என்று பேசுகிறவர்கள், பரிந்தளிக்கும் நஞ்சு கலந்த நல் விருந்தை, இனியும் எவ்வளவு காலந்தின்று உட்கொண்டிருக்கப் போகிறீர்கள் என்று, விடுதலைக்குக் கஷ்டநஷ்டம் பட்டவர்களைப் பார்த்துக் கேட்கிறோம். தியாகத் தழும்பேறிய தோழர்களை, இந்தக்கேள்வி நாம் கேட்பது கிண்டலுக்குமல்ல, குத்தலுக்குமல்ல. வடநாட்டுத் தலைவர்களின் சுயநலப் போக்கினை உணர்த்தவும், அவர்கள் தியாகம் உங்கள் தியாகத்தினும் உயர்ந்ததல்ல எனும் உண்மையை எடுத்துக் காட்டவும், மொழிவழி மாகாணம் அமைப்பது திராவிட நாட்டமைப்புக்கு வாயில் கோலுவது போன்றது எனும் நமது நம்பிக்கையைத் தெளிவு படுத்தவும், உங்கள் போராட்டத்திற்கு ஏற்படும் எதிர்ப்பு எத்தகையது என்பதைவிளக்குவதற்குமே, இவ்வளவும் நாம்கூறுகிறோம்.

தேசீய விருந்தை அளவறிந்து உண்ணுங்கள்; அளவதிகமானால் அமிர்தமும் விஷமாகும் என்பதை அறிவிக்கவே, இதனை எடுத்துக் காட்டினோம். இருதய பூர்வமான வேண்டுகோள் இது.

✲

## செய்தி திரட்டு

கிரேக்கஅரசாங்கத்தைஎதிர்த்துப் போரிட்டுவரும் கிரேக்க கொரில்லா படையினர், ஜெனரல் மார்கோஸ் தலைமையில் ஒரு ஜனநாயக சர்க்காரைப் போட்டியாக நியமித்துள்ளனர்.

* * *

ஏற்கனவே அறிவித்திருந்ததற்கு மாறாக, அமெரிக்காவின் விருப்பத்திற்கிணங்க, 5000 துருப்புகள் கொண்ட ஒருபிரிட்டிஷ்பட்டாளம் கிரேக்க நாட்டில் இருந்துவரும் என்று தெரியவருகிறது

* * *

இத்தாலியின் சணலுக்குப் பதிலாக 20,000 டன் அரிசி அனுப்புவதாக எகிப்து அரசாங்கம் ஒத்துக்கொண்டிருக்கிறது.

* * *

பண்டங்களின் விலையேற்றத்தைக் குறைப்பதற்காகவும், கட்டுப்படுத்துவதற்காகவும்,குடியரசுத்தலைவருக்கு அமெரிக்க பிரதிநிதி சபை அதிகாரம் அளித்திருக்கிறது.

கனடாவிற்கும் இங்கிலாந்திற்கும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. அதன்படி உணவு [illegible] முறை வாக இங்கிலாந்திற்கு [illegible] அளிக்க ஒத்துக்கொண்டிருக்கிறது.

* * *

பதினேழாவது நூற்றாண்டிலிருந்த புகழ்பெற்ற வெர்மர் எனும் ஓவிய நிபுணர் தீட்டின ஓவியங்களைத், தாம் தீட்டிய படங்களை ஏமாற்றி விற்றதற்காக, 58 வயதுடைய ஒரு டச்சு சித்திரக்காரன் ஒரு ஆண்டு கடினகாவல் பெற்றான்.

* * *

இவ்வாண்டு முதல்தேதி, இங்கிலாந்தில், இரயில் முதலிய போக்குவரத்துச் சாதனங்களைப் பொதுச் சொத்தாக்கிவிட்டது. சென்ற ஆண்டில் தான் நிலக்கரி சுரங்கங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. ஏற்கனவே இங்கிலாந்து பேங்கையும், ஆகாய விமான போக்கு வரத்தையும், மின்சார உற்பத்தியையும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கிறது. இரும்புத் தொழிலையும், காஸ் (Gas) உற்பத்தியையும் எடுத்துக்கொள்ள நினைத்திருக்கிறது.

* * *

இரஷ்யாவிற்கும் இங்கிலாந்திற்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி, 750 ஆயிர டன் மாட்டுத்தீவனம் அனுப்புவதாகவும், இரஷ்யாவிற்கு வேண்டிய இயந்திர சாமான்களை பதிலாக இங்கிலாந்து அனுப்புவதாகவும் முடிவாகி இருக்கிறது.

* * *

சென்ற ஆண்டு ஜூலை 19-ல் பர்மிய மந்திரிகள், அவுங்சான் உள்பட எழுவரைச் சுட்டுக் கொன்றதற்குத் தூண்டுதலாக இருந்த காரணத்திற்காக, மாஜி பிரதம மந்திரியான ஊ சாவை தூக்கில் இடும்படி இதற்கென நியமிக்கப்பட்ட விசேஷ நீதி சபை தீர்மானித்துவிட்டது.

* * *

புத்தகங்கள் வெளியிடவும், இரண்டு தினசரி பத்திரிகைகள் நடத்தவும் ரூ 15-லட்சம் ஆரம்ப மூலதனமாக வசூலிக்க அனுமதித்துள்ளது, இந்திய அரசாங்கம்.

* * *

வரவிருக்கும் அமெரிக்கக்குடி அரசு தேர்தலுக்கு ஹென்றி வாலஸ் நிற்பதாக அறிவித்திருக்கிறார்.

## விசாரணையில் வாதநால்

16-ம் பக்கத் தொடர்ச்சி

டிக்கும்போது அவனவன் தலையில் எழுதியபடி சித்திக்குமென்றார்கள். இதுதான் மகம்மதியர்களுடைய தலைவிதி சித்தாந்தமெனப்படும். (Fateor Predestination) சிலர் ஆதியில் கடவுள், தான் சிருஷ்டித்த ஆண் பெண்ணுக்கு நன்மை இன்னதென்றும் தீமை இன்னதென்று அறிந்து நடக்கும்படி, பகுத்தறிவைக் கொடுத்தார்; அதனை மீறினால் மனிதர்கள், நரகத்திலும், பர்கேடரி (Purgatory) யிலும் வேதனைப்படுகின்றார்கள். இதுதான், ஆதிபாபம் (Original Sin) என்பது கிறிஸ்துவர்கள் சித்தாந்தம். இவ்விதமாக, நமது முன்னோர்கள், விஷயங்களைப் பரீட்சித்து அறியாமையால், கண்டபடியெல்லாம், நமக்குள் இயற்கையாகவே ஏற்படும் வித்தியாசங்களுக்கு, காரணங்களைக் கற்பனை செய்து கொண்டார்கள். புத்தர்கள் "கர்மத்தால்" இந்தச்சமூக வித்தியாசங்கள் உண்டாயின என்றார்கள். இந்துக்கள், ஆன்மா செய்துவரும் வினையால், இந்த வேற்றுமைகள் உண்டாகின்றன என்றார்கள். மகம்மதியரும், சில இந்துக்களும், அவனவன் தலைவிதிப்பயன்படி நமக்குள்ள பொருளாதார வித்யாசமுண்டாகின்றன என்றார்கள். கிறிஸ்துவர்கள், ஆதாம் ஏவாள் பூர்வத்தில் செய்த தீமையால், இந்த வித்தியாசங்கள் ஏற்படுகின்றன என்று சித்தாந்தப் படுத்துகின்றார்கள். உலகில் மானிடர்களிடம் காணும் நானாவித வித்தியாசங்களுக்கு அந்தந்த மதஸ்தர்கள், தங்கள் முன்னோர்கள் காரணங்களை கற்பித்துக்கொண்டவாறு, இன்றைக்கும், இந்துக்களும், மகம்மதியர்களும், கிறிஸ்துவர்களும், புத்தர்களும், அதேகற்பிதங்களைச்சித்தாந்தப் படுத்திக்கொள்கிறார்கள். இந்தப்பல வேறுபட்ட சித்தாந்தங்களில், உண்மை எதுவென்று கேட்கின்றோம். இந்தச் சித்தாந்தங்களில், எதையாகிலும்ஒன்றைப்பரிட்சிக்க முடியுமா எனவும் கேட்கின்றோம்?

"கன்மம்" என்ற சொல்லும், "ஆதிபாவம்" என்ற சொல்லும், "மறுபிறப்பென்பதும்" "தலைவிதி" என்பதும், நம் முன்னோர்கள் கற்பித்துக்கொண்ட கற்பனை சொற்களென்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அகஸ்தியர் கமண்டல நீரால் மகா சமுத்திரம் உண்டாயிற்று என்று நம்பும் எந்தச் சிறுவனும் வதுண்டா? ஆனால், கந்தன் இந்த ஜன்மத்தில் செய்த காரியத்திற்காக, வருகிற ஜன்மத்தில், குஷ்டரோகி வீராசாமியாகப் பிறப்பான் என்ற நம்பிக்கை நமது மக்களுக்கு அநந்தம் பேருக்குண்டு! இந்த எண்ணத்தைக்கோடிக்கணக்கான புத்தர்களும் இன்றைக்கும் நம்புகின்றார்கள். புத்தரும் இந்தக்கற்பனையை, இந்துக்களிடமிருந்து தனக்கு வேண்டியவரை எடுத்துக் கொண்டதாகவும், யூகிக்கலாம். இனி புத்தர்களுடைய மற்ற இரண்டு கற்பனைகளாகிய மறுபிறப்பு (Rebrith) (Nirvana) நிர்வாணம், இவைக் குறித்தும் பேசுவோம்.

மறுபிறப்பைப் பற்றிப் பேசும்போது, மறுஜனனத்தை, ஒரு விளக்கு மற்றோர் விளக்கிலிருந்து பெறப்படுவது போலவும், உபாத்தியாயர் மாணாக்கரிடம் பாடம் கற்பிக்கப்படுவது போலவும், ஒரு படத்திலிருந்து பல காப்பிப் படங்கள்பெறுவது போலவும், ஒருவனுடைய சொற்கள், பிறர் கேட்பது போலவும், ஒரு மனிதன் இறந்த பிறகு, அவனுடைய செய்கையும், குணகுணங்களும் பிறரிடம் தோன்றுகின்றனவாம்! இதைத்தான் புத்தர்கள் மறுபிறப்பு என்று வாதிக்கின்றார்கள். புத்தர்கள் கூறும் மறுபிறப்பைக்குறித்த வியாக்யானம், நமக்கு விளங்கவில்லை. வாத்தியார் சொல்லை மாணாக்கர் கேட்டால், அவருடைய சொல், மாணாக்கரிடம், மறுபிறப்பை அடைந்தது என்று சொல்வது யாருக்கும் விளங்காது. இதை மறுபிறப்பென்று யாரும் அழைப்பதில்லை. ஒரு படத்திலிருந்து பல காப்பிகள் எடுத்தால் அந்தப்படம் காப்பிப்படங்களில் மறுபிறப்படைந்தது என்று சொல்வார் யாரும் இலர். இறந்தவனுக்கும், பிறந்தவனுக்கும் மறுபிறப்பில் ஒற்றுமை அதாவது அவன்தான் Identity என்று ஏற்படவேண்டும். இறந்தவன்தான், பிறந்தான் என்று ருசுப்படுத்தும்வரை மறுபிறப்பென்பது வெறுஞ் சொல்லேயொழிய வேறில்லை. ஆனால் புத்தர்கள் இந்த வாதத்திற்கு ஒரு நியாயம் சொல்கின்றார்கள். அதாவது உயிருடன் இருக்கும்போதே ஒருவன் க்ஷணத்திற்கு க்ஷணம் மாறுவதால் அவன்தான் எந்தக்காலத்திலும் இருப்பதாகச் சொல்ல முடியாதே என்பார்கள். ஒருவன் க்ஷணத்திற்குச் க்ஷணம் மாறுவது வாஸ்தவந்தான். அவன் தேகம் மாறுவதைப்போல் அவன் செய்கைகள் மாறுவதும் உண்மை. ஆனால் எந்தச்செய்கை அவன் இறந்தபோது வேறு உடலைப் பெறுவது என்று கேட்கின்றோம்? புத்தர்கள் மறுஜனன விஷயமாகக் கூறும் வாதம் (Sophistry) அதாவது குதர்க்க வாதமென்றே கூறல் வேண்டும். மறுஜனனம் என்ற கற்பிதம் புராதன கற்பிதமாகும். காட்டுமிராண்டிகளிடம் இந்தக் கற்பனையைக் காணலாம். இறந்தபிறகு தங்கள் உயிர் மலையிலும், காட்டிலும், செடியிலும் நீரிலும் தங்கி ஆட்டின் வயிற்றிலோ மாட்டு வயிற்றிலோ, புலிவயிற்றிலோ, அல்லது சிங்கம் வயிற்றிலோ இன்னும் பல சீவன் வயிற்றிலோ பிறக்கும் என்று காட்டுமிராண்டிகள் (Savages) நம்பி வருகின்றார்கள். இந்துக்களும் அதே மாதிரியாகவே தங்கள் உயிர் மறுபடியும் பிறப்பதாக எண்ணி வருகின்றனர். புத்தரும், தான் முன்ஜன்மத்தில் பட்சியாகவோ, மிருகமாகவோ இன்னும் பல உயிர்களாகவோ பிறந்து பிறந்து கடைசியில் புத்தராகப்பிறந்தார் என்று கூறியுள்ள கதைகளைப் படிக்

(அடுத்த பக்கம் பார்க்க)

புதிய வருஷத்திற்கு
சேமிப்பின் அறிகுறி
பொங்கல்.

அனைவருக்கும்
வாழ்த்துக்கள்

நல்வாழ்க்கைக்கும்
கவலையின்மைக்கும்
இன்ஷ்யூரன்ஸ்

தமிழர்களிடையே பண்டைக்கால ஒத்துழைப்பு முறையை
நூதன திட்டங்களுடன் இன்ஷ்யூரன்ஸ் முறையில்
சர்க்கார் கண்காணிப்பில் வழங்கும்.

இந்தியா ஊப் பெனிபிட் இன்ஷ்யூரன்ஸ் சொஸைடி லிமிடெட்
தலைமை ஆபீஸ், கோயமுத்தூர்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

கலாம். இது பழமையான கற்பனை என்போம். ஆனால் நமது நாட்டில் தற்காலப் புதிய புத்தர்கள் இந்தப் புராதன புத்த கோட்பாட்டை ஒரு போக்காக வியாக்கியானம் செய்கின்றார்கள். அப்படித்தெரியாதவொன்றைத் தெரிந்ததுபோல் பாசாங்கு செய்வதைவிடப் புத்தர்கள் நம்பும் புனர் ஜனனத்திற்கு ஆதாரம் ஒன்றுமில்லை.

உள்ளதை உள்ளபடி உரைக்க அறிஞர்கள் மயங்கும் வரை உலகம் காட்டுமிராண்டித் தன்மையிலேயே இருந்து வருமென அறிக.

மறு பிறப்பின் ஆபாசம் இவ்வாறு இருக்கப் புத்தர்கள் கூறும் நிர்வாணப்பதவி என்றால் என்ன? நிர்வாணமென்பது சமஸ்கிருத வார்த்தை. பாலி பாஷையில் நிப்பண (Nibbana) என்று வழங்குவார்கள். ஆதியில (Originally) நிர்வாணமென்றால், அவிந்துபோவதென்று பொருள். எரியும் தீபம் (Fire) அவிந்து போவது போல் மனிதனும் அவிந்து போகின்றான் என்ற கருத்தை விளக்க நிர்வாணமென்ற சொல்லைப் புத்தர்கள் உபயோகித்ததாகத் தெரிகிறது. ஆனால்காலஅளவில்இந்தச்சொல்லைப் பல பொருள்பட உபயோகிக்கப் பட்டு வருகின்றது. கௌதம புத்தர் இந்தச் சொல்லுக்கு எந்தப் பொருள் கொடுத்தாரென்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. சாமான்யமாக புத்த கூட்டத்தார் இதுவொரு மோட்ச உலகமென்று எண்ணுகிறார்கள். சத்தர்மபுண்டரீகம் (Saddharma Pundarika) என்ற நூலில் நிர்வாணமடைந்தோர் துசிதலோகத்திற்கு லாயக்கானவர் என்று கூறியுள்ளது. சில புத்த நூல்களில ராக, துவேஷ, போகங்களை ஒழிப்பதே நிர்வாணமென்று கூறப்பட்டுள்ளது. இன்னுஞ் சில நூல்களில் தான, சீல, சமாதி மூன்றையும் தசசீலத்தையும், அஷ்டாங்க மார்க்கத்தையும் கையாடினவர்கள் நிர்வாணத்திற்குத் தகுதி என்று சொல்லப்படுகிறது. கௌதம புத்தர் இந்தப் பிறப்பிலேயே நிர்வாணத்தை அடைந்ததாகச் சொல்லப் படுகிறது. சிலர் நிர்வாணமென்றால் இறந்து போவதென்றும் சொல்லுகின்றார்கள். இதைப் பரி நிர்வாணமென்று கூறுவர். புத்த நூல்களில் அந்தந்தச்சமயத்திற்கு ஒத்தவாறு நிர்வாணத்திற்கு அர்த்தம் கொடுக்கப் பட்டு இருக்கின்றன. உண்மையாகவே இது நமக்கு விளங்கவில்லை. வேதாந்திகள் தங்கள் பூர்ண நிலையை (Summum Bonum) சீவன் முக்தி என்று சொல்லுகிறார்கள். புத்தர்களும் தங்கள் பூர்ண நிலையை நிர்வாணம் என்கிறார்கள். இரண்டுநிலையும் இந்த ஜன்மத்தில் அடையக்கூடுமாம். ஆனால வேதத்தில் தனது 'ஆன்மா' சீவன் முக்தி நிலையை அடைவதாகவும், புத்தர்கள் அநாத்ம நிலையே நிர்வாணமென்கிறார்கள் போலும். ஆனால் நமக்கு 'சீவன் முக்தியும்' 'நிர்வாணமும்' இரண்டும் மூட நம்பிக்கைகளெனத் தோன்றுகின்றன.

★

# கருத்துக்கினிய கீதம்

—●—

இது கிறிஸ்மஸ் சீசன். வாழ்வின் மேற்தட்டில் இருக்கும் சுகஜீவிகள் முதல், அடித்தளத்தில் நசுக்குண்டு நலிந்துபோய் இருக்கும் நாணுவிதமானவர்கள்வரை, மாநாடு கூட்டுவதும், சிலருக்கு, இல்லாத சிறப்பியல்புகள் எல்லாம் நிறைந்திருப்பதாகப் புகழுரை சூட்டுவதும், உலகம் இன்னின்ன வகையில் இருத்தல் வேண்டுமென விளக்கங் கூறுவதும், அதற்கான இரண்டொரு தீர்மானங்களைச் செய்து அரசியலாருக்கு அறிவித்து விடுவது, அததுடன் தங்கள் அபிலாஷை பூர்த்தியடைந்து விட்டதாகப் பூரிப்புடைவதும், வீடு திரும்பிச் சொந்த வேலையில மூழ்குவதும், பலநாள் பழக்கமாகும். இத்தகைய மாநாடுகளில், பாட்டுமொழி, வீட்டு மொழி, கிளிப்பேச்சு, குயில் ஓசை, கர்ஜனை, ஊளை, உறுமல், கதறல், கத்தல் இத்யாதி வகையான பேச்சுகளையும் கேட்கலாம்.

அதிகப்படியான மாநாடுகளில், ஆளும் போக்கில் காணப்படும் மேடுபள்ளங்கள், கவனிக்காமல் விட்டகாரியங்கள், செய்து கெடுக்கும் செயல்கள், முதலியனவற்றை விளக்கியும், தெளிவு படுத்தியும், கண்டித்தும் எண்ணத்தை உருவாக்கியும் தீர்மானங்கள் தீட்டுவர். எந்த மாநாட்டிலும், எத்தகையவர் கூடின போதிலும், ஏதோ அவரவர் வாழ்க்கையில், எங்கோ ஓரிடத்தில், தங்களால் மட்டும் தீர்த்துக்கொள்ளமுடியாத சிக்கல் மறைந்திருப்பதாகப் பிரலாபிக்கும் போக்கே தொக்கி இருக்கும். இத்தகைய சிக்கல்களால் ஏற்படும் வேதனை விளைவுகளை மிகைபடக்கூறியும், அதற்குப் பரிகாரமாகக் கையாளவேண்டிய இரண்டொரு உபாயங்களை எடுத்துக் காட்டியும், கலைந்து விடுவர். இவர்கள்கடமையும் அத்துடன் தீர்ந்துவிடுவதாகவும் நினைத்துக் கொண்டு விடுவர். தொலைதரும் விளைவுகளைத் தற்கால சாந்தியாகப் போக்கிக் கொள்ள முயல்கின்றனரேயன்றி, அதற்கான மூலகாரணத்தை நுணுகி ஆராய்ந்து, அதனை அகற்ற அனுபவ சித்தாந்தமாகவும், அறிஞர் நல் வழியாகவும் கண்ட, எந்தவிதப் பாதையையும் பின்பற்ற, இவர்களிற்பலர் முனைவது கிடையாது. இன்றுள்ள சமூக அமைப்பில் அவர்கள் பெற்றுள்ள இடம், இன்பூறுகள் மலிந்துள்ளதாக இருந்தபோதிலும், அதிலும் சிறு சிறு அளவினதாக இன்பமூட்டும் இயல்புகள் மறைந்து கிடப்பதால், அதனையும் எவ்வாறு இழந்துவிடுவது எனும் முடிவிற்கு வந்து, ஏற்படும் நெருக்கடிகளின் வேகத்தைத் தணித்துக் கொள்வதற்கு முயல்கின்றனர். முன் அமைப்பில் உள்ள முரண்பாடுகளை இவர்கள் உணர்ந்துள்ளார்கள். அதனைப் போக்கிக் கொள்ளவும் முயலுகிறார்கள். அதற்காக இவர்கள் காட்டும் ஆர்வம் வரவேற்கத் தகுந்தது எனும் முறையிலேயே, இம்மாநாடுகளில் நடைபெறும் விஷயங்களை ஆராய்தல அவசியமாகும். எவ்வளவு நமக்கும் அவர்களுக்கும் வேறுபாடு இருந்த போதிலும், மக்களுக்குச் சுகவாழ்வு வேண்டுமென்பதிலும், திடகாத்திர தேகிகளாக மக்கள் இருக்கவேண்டுமென்பதிலும், பிறர் எவ்வாறு கருதுகிறார்கள் என்பதற்கும், நமது விருப்பத்திற்கும் மாறுபாடு இருக்கிறதா என்றே கவனித்தல் வேண்டும். அவர்கள் பேச்சுக் காற்றோடு கலந்துவிடுமா—செயலுக்கு வருமா என்று ஆராய்வதைவிட, நாம் பலகாலத்திற்கு முன்பே சொல்லிவந்த விஷயங்களை இன்று அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்களே, அதுவே நமது போக்குக்கு நற்சாட்சிப்பத்திரம் அளித்ததாகும், எனும் அளவில் நாம் மகிழ்ச்சி

கொள்ளவேண்டும். மேலும் நமது பணியைத் தொடர்ந்து நடத்தவும் இது ஊக்கமளிக்கிறது எனவும் திருப்தி கொள்ளவேண்டும். இதன் படி பார்க்கும்பொழுது, சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாடு ஒரு வகையில் நமது கருத்துக் கினிய கீதமாக அமைந்திருக்கிறது. இரண்டொருவரின் வாயுரை பழம் பஞ்சாங்கமாகவும் இருந்தது. கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன கருத்துக்களாகவும் இருந்தன.

தலைமையுரை ஆற்றிய தோழியர் அனுசூயாபாய்காளே, செல்வச்சீமாட்டிகளின் சார்பில்தான் பேசியுள்ளார். இருந்தாலும் அவர்கள் கூறின சில நமக்கு உற்சாகமளிக்கக்கூடியன; நாம் சென்ற இருபது ஆண்டுகளாகச் சொல்லிவந்தவையுமாகும்.

“ஆணுக்குப்பெண் அடிமைஅல்ல. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் படை பயிற்சி இளமையிலேயே அளிக்கப்படவேண்டும். கருத்தடை பற்றிய விஞ்ஞான முறைகளைப் போதிக்கவேண்டும். மனிதனுக்கு மனிதன் பேதம் காட்டும் ஜாதி வேற்றுமையும், தீண்டாமையும் ஒழிக்கப்படவேண்டும். ஆண் கல்வியைக் காட்டிலும் பெண் கல்வி மிகமுக்கியமானது. விவாக விடுதலை உரிமையும், சொத்துரிமையும் வேண்டும். மொழிவாரி மாகாணம் பிரிக்கப்படுவதில் காலதாமதம் காட்டுதல் கூடாது. பழைய மனுஸ்மிருதியை மாற்றி, சமத்துவமும், சமநீதியும் அளிக்கும் புதியதோர் மனிதஸ்மிருதியை ஏற்படுத்தவேண்டும். இவற்றை நிறைவேற்ற, மாகாணங்களிலும், மத்தியிலும் தனித்தனி பிரிவுகளும், அதற்கான அமைச்சர்களும் ஏற்படுத்தவேண்டும்.” தலைவியர் அனுசூயாபாய்காளேயின், தலைமை உரையின் சாரம் இதுதான்.

பழைய மனு முறையால், தலைவியார் கூறினஎதுவும் நடைமுறைக்குக் கொணரக்கூடியதன்று. பெண்கள் வெறும், பிள்ளை பெறும் பண்ணைகள் என்பதுதான் மனுவின் சித்தாந்தம். மணமே, சந்ததிவிருத்தியைக்கருதிச் செய்து கொள்ளப்படும் தெய்வ காரியமென்பதும், பிள்ளை பெறாத மனைவியை ஒதுக்கிவிட்டு, வேறு பெண்களை மணக்க ஆணுக்கு உரிமை அளிப்பதும், அந்த மனுவின் வாய் ளளப்பேயாகும். எனவே ஆண்களுடன் சரிநிகர் வாழ்வு வேண்டுமென்றுபேசும் தலைவியார், மனுவுக்கு மரணஓலை வாசித்திருப்பதில் வியப்பொன்றும் இல்லை.

பிள்ளை பெறுவதைத் தடுக்க வேண்டுமென்பது ஒன்றே போதும், மனுமாந்தாதா வழிவந்த வைதிகர்களுக்கு, காந்தியாரையும் இந்தப் பட்டியில் சேர்த்துத்தான் சொல்லுகிறோம். விவாகரத்து வேண்டுமென்பது, தொழுநோய் பிடித்த தூர்த்தனை, தாசி வீட்டிற்குத் தலைமேல் சுமந்து சென்ற, நளாயினிகளாக, இனிப் பெண்கள் இருக்கமாட்டார்கள் எனும் உள்ளக் கிடக்கையின் ஒலியே அது.

குழந்தைகளின் பெருக்கத்தால் ‘இன்ப வாழ்வு’ பெண்ணுக்கு இல்லாமல் போகிறதென்று, தலைவியார் கூறுவது எல்லாப் பெண்களுக்கும் உடன்பாடுடையதே. குசேலர் மனைவிக்குக் கிடைத்தது இன்பவாழ்வா? வேணுகானனையன்றி வேறொன்றறியா வேதியர்குலதிலகனுக்கே, காமத்தை அடக்கும் ஆற்றல் இல்லாது, இருபத்தேழு பிள்ளைகளைப் பயிரிட்டாரென்றால், சாதாரண மக்களால் இயற்கை உணர்ச்சியை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்? எனவே கருத்தடைப் பயிற்சி அளிக்கப்பட வேண்டியதின் இன்றியமையாமையை அறிஞர் மறுக்கார்.

மக்கள் பெருக்கத்திற்கேற்ப, இங்கு உணவுப்பொருள் உற்பத்தி பெருகவில்லை என்றும், ஆதலால் மக்கள் அதிகரிப்பைத் தடுக்க வேண்டுமென்றும், அம்மையார் கூறுவது விவாதத்திற்குரியதாகும். கல்வியறிவும், கலை நுணுக்கமும், உயர்ந்த பண்பாடும் உடைய மக்கள் கூட்டத்தில், பிள்ளைப்பேறு குறைந்தேகாணப்படுகிறது. கல்வியறிவு பரவினால் மக்கள் எண்ணிக்கை இன்றுள்ள தன்மையில் பெருக்கமடையாது. அனைவரும் கல்வி பெறுவதற்குத் தடையாக இருப்பது, தனி நபர்களுக்குள்ள வறுமையே காரணமாகும். ஒரே போகப்பொருள்—பொழுதுபோக்கு — இன்பசாதனம் —மனைவியாகவே இருக்கிறாள் அந்த வறியவனுக்கும். ‘என்ன காரணத்தாலோ, ஏழைகள் வீட்டில்தான் அதிகமான குழந்தைகள் பிறக்கின்றன’ என்று ‘தினமணி,’ கல்லாதவருக்கு ஏற்படும் குழப்பம்போல் பேசுகிறது. அதற்கு உண்மை தெரியாதென்பதல்ல. பிறர் வாழ்விற்கு, அந்தப் பேனா பாடுபட வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால்தான், உண்மை தெரியாதது போல் எழுதவேண்டியதாக இருக்கிறது.

குசேலருக்குப் பிள்ளைகள் பல பிறந்ததற்கு, செல்வமிருந்தும்,

(9-ம் பக்கம் பார்க்க)

## வாழ்க்கை ஒப்பந்த அழைப்பு.

—✲—

“திராவிடநாடு” அலுவலகத்தில் பணியாற்றிவரும்

தோழர்

**சி. இராசாபாதர் அவர்கள்**

தோழியர்

**பேபி அம்மாளை**

வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்ளும் திருமண நிகழ்ச்சி, சின்னக்காஞ்சிபுரம், வரகுவாசல் தெரு 64-ம் எண் இல்லத்தில், 18—1—48 ஞாயிறு காலையில்,

**நகைச்சுவை அரசர் என். எஸ். கிருஷ்ணன்**

அவர்கள் தலைமையில், தோழர்கள் S. குருசாமி, பி. ஏ; A. K. தங்கவேலர், காஞ்சி கலியாணசுந்தரனார், C. N. அண்ணாத்துரை முதலானவர்களின் சொற்பொழிவுகளுடன் நடைபெறும். அன்பர்கள் இதனையே அழைப்பாகக்கொண்டு, சிறப்பிக்க வேண்டுகிறோம்.

# விசாரணையில்லாததால் ஏற்படும் தவறு

★

எந்த மதமாயினும் அதனதன் கோட்பாடுகள், விஞ்ஞான முறைப்படி, மூடநம்பிக்கை எனறே எண்ண வேண்டும். ஏனெனில் அவைகளின் கோட்பாடுகள் விஞ்ஞான விஷயங்களைப்போல் பார்வைக்கும் பரீட்சைக்கும் இடந்தராதவை. விஞ்ஞான முறை ஏதோ அபூர்வமுறை என எண்ணலாகாது. இதன் முக்கிய கருத்துஎன்னவெனில், எந்தசம்பவமாயினும் நமது அனுபவத்திற்கே பொருத்தியும் உட்பட்டும் இருக்க வேண்டும். நமக்குத் தெரிந்த காரணங்களைக்கொண்டு அறியும்வரை வேறெந்தக் காரணத்தையும் கருதலாகா. திருஷ்டாந்தரமாக "பேய் பிடித்த வீட்டின்" சம்பவமொன்றை எடுத்துக்கொள்வோம். பாதிஇரவில் ஒரு சப்தம் கேட்டதாக இருக்கட்டும். இந்தச் சப்தம் யாரால் செய்து இருக்கக்கூடும்? சாதாரணமாகக்காற்றால் சப்தம் உண்டாய் இருக்கலாம்; அல்லது மனிதர்களால் உண்டாயிருக்கலாம், அல்லது ஏதாகிலும் சாமான் விழுந்தால் அதனால் உண்டாயிருக்கலாம். அல்லது சப்தம் கேட்பதுபோல் எண்ணியுமிருக்கலாம். அல்லது காதின் பலஹீனத்தால் சப்தத்தைக்கேட்ட மாதிரியாய் இருக்கலாம். இத்தியாதி காரணங்களால் சப்தமென்ற சம்பவம் உண்டாவது சகஜம். இந்தக்காரணங்களைத்தேடி அறிந்துகொள்ளும்வரை வேறு எந்தக் காரணத்தையும் குறிப்பிடுவது நியாயமானதாகா. மேற்குறித்த காரணங்களால் உண்டாகவில்லை அந்த சப்தம் என்று முடிவு கட்டினாலும், சாதாரண அனுபவத்திற்கு மாறான அல்லது அதிசயமான (Strange) காரணங்களைக் குறிப்பிடுவதும் நியாயமாகா. உலகில்நடக்கும் ஆயிரம் சம்பவங்களில் 999 சம்பவங்கள் சாதாரண காரணங்களால் நடக்கின்றனவென்பது நமது அனுபவம். நமக்குப்போதுமானசந்தர்ப்பங்கள் கிடைக்காமையாலோ அல்லது சோம்பேரித்தனத்தினாலோ, அல்லது பொய் நம்பிக்கையின்மேல் வைத்துள்ள பக்தியாலோ ஒரு சம்பவத்தின் காரணத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் போகும். அந்த அவசரத்தில் அதீதமான காரணத்தை உற்பத்தி செய்துகொள்கிறோம். சப்தம் உண்டான காரணம் தெரியாதபடியால் பழக்க வாசனையால் அந்தச்சப்தம் தெய்வத்தாலோ, பேயாலோ, பிசாசாலோ, உண்டாயிற்றென்று தீர்மானிக்கின்றோம். இதுதான் நாம் விசாரிக்காமல் செய்யும் தீர்மானங்களென அறிக. இவ்வித அவசர தீர்மானங்களால் உலகில் பூதம், பேய், பிசாசு, கடவுள், ஆன்மா, நரகம், மோட்சம், கன்மம், நிர்வாணம் இவைகளைச் சிருஷ்டி செய்து விடுகின்றோம். காற்று மழை எப்படி உண்டாயிற்று என்ற காரணத்தைத் தெரியாதவரை மாருதியும், இந்திரனும் காற்றையும் மழையையும் உண்டாக்கினதாக எண்ணி இருந்தார்கள். ஆனால் விஞ்ஞான ஆராய்ச்சியால் காற்றையும்மழையையும் பூதபௌதீக காரணங்களால் உண்டானதாகத் தெரிந்துகொண்ட பிறகு மாருதியும், வருணனும் கற்பனை சொற்களாகத்தீர்மானிக்கப்பட்டன. அதுபோலவே பேய் பிடித்த வீடுகளென்று (Haunted House) அதில் நடந்த சில சம்பவங்களைக் கொண்டு அவசரத்தில் தீர்மானித்தார்கள். ஆனால் ஆராய்ச்சியால் பேய்பிடித்த வீடு என்பதும், பிசாசு பிடித்த வீடு என்பதும் பொய்யென்று கருதப்பட நேர்ந்தது. பேய் பிடித்த வீடுகளென்று சொல்லி வந்த இடங்களெல்லாம் 1000-க்கு 999 வீடுகளை பேயும் பிடிக்கவுமில்லை, பிசாசும் பிடிக்கவுமில்லை என்று கருதப்படுகின்றன. எங்கேயோ ஒரு வீட்டில் நடந்த சம்பவத்தின் காரணத்தைக் கண்டு பிடிக்க முடியாவிட்டால், அதனாலேயே பேய்பிடித்த சம்பவம் உண்மையெனத் தீர்மானிக்கலாகாது.

இந்தநியாயங்களைப்புத்தமதக்கோட்பாடுகளைக்குறித்து உபயோகிப்போம்.

கர்மம் என்ற சொல்லை விசாரிப்போம். கர்மம் என்றால் செய்கை. கையாலும், காலாலும், தேக உருப்புகளாலும் செய்யும் வேலைகளை, கர்மம் என்று சொல்லவேண்டும். நாம் செய்யும் செய்கைகள் போலவே மரங்களும், மற்றச் சீவன்களும் கர்மத்தைச் செய்கின்றன. ஆனால் மரத்தின் கன்மம், பட்சிகளின் கன்மம், நாய், நரி முதலிய மிருகங்களின் கன்மம் என்று சொல்வதில்லையே! எந்த நடத்தைக்கு ஈடாக எந்தப் பலன் கிடைக்கின்றதென்று சொல்லக்கூடும்? இந்த ஜன்மத்தில் நாம் செய்யும் காரியங்களுக்கெல்லாம் தக்கபடி என்னபலன் கிடைப்பதென்பது என்ன நிச்சயம்? சிலதிற்கு பலன் கிடைக்கின்றது. சிலதிற்கில்லை. கிடைத்தாலும் உழைப்புக்குத் தகுந்த பலன் கிடைப்பதில்லை. ஆதலின் கன்மத்திற்குத் தகுந்தபடி அனுபவிப்பான் என்பதில் என்ன அர்த்தம்? இவ்வுலகில் நீதி என்பதும் நெறி என்பதும் அந்தந்த ஜன சமூக வாழ்க்கையில் அந்தந்த அவசரத்திற்குத் தக்கபடி உண்டானவை. திருஷ்டாந்தரமாகத், கொலை செய்வது பாதகமென்று பஞ்ச சீலத்திலும் பத்துக் கட்டளையிலும் படிக்கின்றோம். இதை துற்கருமம் என்று சொல்கின்றோம்! ஆனால் சண்டையில் (போரில்) கொன்றால் நற்கருமமென்று கொலை செய்தவனைத் துதிக்கின்றோம்! ஆதலின் 'கொலை' என்பதைக் கெட்டதென்பதும், நல்லதென்பதும் அந்தந்த அவசரத்திற்கேற்க ஏற்பட்ட குணங்களேயொழிய அதை நற்கருமமென்பதும், அல்லது துற்கருமமென்பதும் கருமத்திற்குத் தக்கவாறு பயன் கிடைப்பதென்பதும் பொருத்தமில்லாத சொற்களேயாகும்.

கன்மம் என்ற சொல் எப்படிப் புத்த மதத்தில் நுழைந்தது என்று விசாரிப்போம். 'கன்மம்' (Kanma) என்பது இந்து மதத்தின் புராதன சொல்லாகும். இந்தச் சொல்லின் விஷயமாக இந்துக்கள் செய்துள்ள கற்பனை என்னவெனில், மனிதனுக்குள் ஒரு 'ஆன்மா'வுண்டு, அந்த ஆன்மா இந்த ஜன்மத்தில் செய்து வரும் நற்கருமத்தையோ, துற்கருமத்தையோ பின் ஜன்மத்தில அனுபவிக்கின்றது அந்தந்த ஆன்மாக்களின் வினைக்கீடாக மறுஜன்மத்தில் பலன் அனுபவிக்கவேண்டும். இந்த ஜன்மத்தில் ஆன்மாக்களுக்குள்ள வித்தியாசம், முன்ஜன்மத்தில் செய்த வினைப்பயனாகும் என்று கதை கட்டினார்கள். இந்தக் கதையை, புத்தர்களும் தங்கள் மத சித்தாந்தமாக்கிக் கொண்டார்கள். ஆனால் புத்தர்கள் அனாத்மவாதிகளாதலால், அதாவது ஆத்மா இல்லை என்று சொல்லுகின்றவர்களாதலால் ஆத்மா இல்லாமலே கன்மம் ஒரு ஜன்மத்திலிருந்து மற்றோர் ஜன்மத்திற்குப்பலன் அளிப்பதாக உத்தேசித்

தார்கள். இது வெறும் உத்தேசமே யொழிய இந்தக் கற்பனைக்கு ஒரு ஆதாரமும் கிடையா. ஆன்மா இல்லாமல் கருமத்திற்கு ஈடாகப் பலன் யார் அனுபவிப்பது? புத்தர்கள் சித்தாந்தப்படி பஞ்சபூத சையோகத்தினாலும், பஞ்சஸ்கந்த சையோகத்தினாலும் ஆக்கப்பட்ட தேகம் சடலையோடு அழிந்துபோவதால், இறந்த பிறகு எதுபோய் மறுபிறப்பில் வினையை அனுபவிப்பது? இதற்கு பத்தர்கள், வார்த்தைஜாலமொன்றை செய்வதாகத் தெரிய வருகிறது. புத்தர்களில் ஒரு வகுப்பார் இறக்குங்காலை எண்ணிய கோரிக்கை மறுபிறப்பை அடைவதாகச் சொல்லுகின்றார்கள். (சம்யுத நிகாயம் IV. 302) மற்றொருவர் சொல்வதாவது, நாம் உயிர்வாழுங் காலை எந்த எண்ணத்தை விசேடமாகக் கொள்கின்றோமோ அந்த எண்ணமே மறுபிறப்பை அடைகிறது. (மஜ்ஜிம நிகாயம் III. 90) பேத்வத்து, விமானவத்து என்ற புத்தகங்களில் ஏதாகிலும் ஒரு காரியம் மறுபிறப்பை அடைவதாக எழுதியுள்ளது. தம்ம சங்கினி (Dhumma Sangini) என்ற புத்தர்களுடைய மானவ நூல், (Buddhist Psychology), ஒருவனுடைய மனத்தின் போக்கே (Mental Disposition) மறு ஜனனம் எடுப்பதாகக் கூறுகிறது. இவ்வாறு ஒன்றுக்கொன்று பொருந்தாத சொற்களைக்கொண்டு, புத்தர்கள், ஆன்மா இல்லாத மறுபிறப்பை கற்பிக்கின்றார்கள். ஆதலின், புத்தர்களுக்குள்ளே முரண்பட்ட கர்ம சித்தாந்தம், கற்பிதமென்பதற்கு என்ன தடை? இவர்களுடைய கர்ம சித்தாந்தத்திற்கும், கிறிஸ்துவர்களுடைய புண்ணிய பாபசித்தாந்தத்திற்கும் (Good and Evil Doctrine) யாதொரு வித்தியாசமுமில்லை. கிறிஸ்துவர்களும், ஒருவன் நன்மை செய்தால் மோட்சமடைகின்றான், தீமை செய்தால், நரகத்திற்குச் செல்கின்றான் என்று சித்தாந்தப்படுத்துகின்றார்கள். இறந்த பிறகு சீவித காலத்தில் நன்மையோ, தீமையோ செய்தவொருவன், நரகத்திற்கோ, அல்லது மோட்சத்திற்கோ போகின்ற விஷயத்திற்கு, யாதொரு அத்தாட்சியும் இல்லை. இந்த நன்மை தீமை சித்தாந்தம், ஏட்டுச் சுரக்காய்போன்ற வெறுஞ் சொல்லே. இந்தச் சித்தாந்தத்தில், எந்த உண்மையுமில்லை, வெறுங் கற்பனையே. அது போலவே, புத்தர்களுடைய கர்ம சித்தாந்தமும், வெறுஞ் சொல்லேயாகும். உலகில் சிலர் தனவந்தர்களாகவும், சிலர் தரித்திரர்களாகவும், சிலர் நோயற்றவர்களாகவும் சிலர் நோயாளிகளாகவும், சிலர் சுகபோகிகளாகவும், சிலர் சுகமற்றவர்களாகவும், சிலர் அரசர்களாகவும் சிலர் தாழ்த்தப்பட்டோர்களாகவும் இருந்து வருவதை நமது முன்னோர்கள்கண்டார்கள். இந்தச் சமூக வித்தியாசங்களுக்கும், பொருளாதார வித்தியாசக்களுக்கும், எது காரணமாய் இருக்கக்கூடுமென நம்மவர்கள் சிந்தித்தார்கள். சிலர், இந்த பிறப்பில் அனுபவிக்கும் சுகா சுகங்களை, முன்பிறப்பில் செய்த வினையால் என்றார்கள். இந்த யோசனை, இந்துக்களுடைய மறுபிறப்புக் கற்பனையே, புத்தர்களுடைய மறுபிறப்பு கற்பனைக்கு ஆதாரமாய் நின்றது. இந்தக்கற்பனையே, புத்தர்களுடைய கர்ம சித்தாந்தத்திற்கும் ஆதாரமாய்விட்டது. இன்னுஞ் சிலர், அவனவன் தலைவிதிப்படி நடப்பதென்றார்கள். பிரமன் சிருஷ்

(12-ம் பக்கம் பார்க்க)

## திருவாங்கூரில்

6-ம் பக்கத் தொடர்ச்சி

கிறார். உயர்ந்த உத்தியோகங்களில் மலையாளிகள் தான் இருக்கிறார்கள். பட்டத்தின் பந்துக்களில் பலர் அரசாங்க உத்தியோகஸ்தர்கள். திருவனந்தபுரம் பேஷ்கார் (கலக்டர்) பட்டம் தாணுப்பிள்ளையின் மனைவியாரின் சகோதரியின் கணவர். இப்படி இப்பெரியவருக்கு எங்கும் நல்லபிடி. உத்தியோக வட்டாரங்களில் மலையாளக் காங்கிரஸ்காரருக்கு—காந்தி பக்தருக்கு இருக்கும் பிடியின் பிணைப்பைப் பார்த்தீர்களா?

போதாக் குறைக்கு ஸர். ஸி. பி. ராமசாமி ஐயர் திவானாயிருக்கும் காலத்தில் தடியடி தர்பார் பழக்கமும் பரிசீலனையும் நன்கு பாடம் கேட்ட போலீஸ் அதிகாரிகள் இன்றும் திருவாங்கூரிலிருக்கிறார்கள். இவர்களெல்லாம் பரிசுத்த மலையாளிகள். பட்டம், அடுத்த மந்திரியாகப் போகிறாரென்று நம்பும் நபர்கள். ஆகவே தமிழர்களின் பிரசாரக் கூட்டங்களைப் பல பொய்க்காரணங்களைக் காட்டித் தடைசெய்யமுற்பட்டு வருகிறார்கள். கூட்டங்கள் கலைக்கப்பட்டு வருகின்றன. தமிழர்கள் துன்புறுத்தப்படுகிறார்கள். திருவாங்கூரில் தமிழ் மொழிக்கே ஆபத்து வந்திருக்கிறது. தமிழ் வளர்ச்சிக்காக டாக்டர் அழகப்பச் செட்டியாரால் ஸர். ஸி. பி. அவர்களிடம் வழங்கப்பெற்ற ஒரு லட்சம் ரூபாயை அந்த மகானுபாவர் அன்றே வடமொழிவளர்ச்சிக்காகச் செலவு செய்துவிட்டார். இதுபற்றி இதுவரை எந்தப் பேச்சு மூச்சும் கிடையாது.

திருவாங்கூரில் தமிழர்கள் மலையாளிகளாகக் கூட ஆக்கப்படுகிறார்களென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடவிரும்புகிறேன். 1931—ம் வருடத்திய திருவாங்கூர் சென்ஸஸ் ரிப்போர்ட்டையும் 1941—ம் வருடத்திய சென்ஸஸ் ரிப்போர்ட்டையும் பரிசீலனை செய்து பார்த்தால் இவ்வுண்மை பட்டவர்த்தனமாகத் தெரியவரும். 1931 முதல் 1941 வரை 100க்கு 21 பேர் விகிதம் மலையாளிகள் பெருகி வந்திருப்பதாகப் புள்ளி விவரம் கூறுகிறது. தமிழர்கள் 100க்கு 11 விகிதம் பெருகி வருவதாகத் தெரிகிறது. பிறப்பு—இறப்புக் கணக்குகள் இரு வகுப்பார்களுக்கும் சரி சமமாகவே சென்ஸஸ் ரிப்போர்ட்டில் சொல்லப்படுகிறது. இப்படியிருந்தும் இம்மாதிரி வித்தியாசம் எப்படி வந்தது என்று ஆச்சரியமாக இருக்கிறது. ஆச்சரியமொன்றுமில்லை. தமிழர்களில் பலர் மலையாளிகளாகக் கணிக்கப்பட்டு, நாளடைவில் மாற்றப்பட்டு வரப்படுகிறது. இந்த அடிப்படையான சூழ்ச்சியை மலையாள சர்க்காரால்தானே செய்ய முடியும்?

தமிழுக்கும் மலையாளத்திற்கும் எந்தவித தொடர்புமில்லையென்று மலையாளிகள் கூறத்தலைப்பட்டுவிட்டார்கள். ஆனால் வடமொழியிலிருந்து மலையாளம் பிறந்ததாகச் சம்மதிக்கிறார்கள். பரதநாட்டியம் கதகளியிலிருந்து வந்ததாகச்சில படித்த மலையாளிகளும் சமஸ்தான காங்கிரஸ் வாதிகளும் பயித்தியக்காரர்களைப்போலக்கூறி வருகிறார்களென்றால் நமக்கு வியப்பாயிருக்கிறது. இவர்கள் எதைத்தான் சொல்லாமலிருக்கப்போகிறார்களென்று தெரியவில்லை. நிலைமை இப்படியிருக்க, இங்கே, தமிழ் நாட்டைப் பாஷா வாரியாகப் பிரிக்கப் பாடுபடுவதாக சொல்வதின் அர்த்தம் என்ன என்று விளங்கவில்லை.

4-ம் பக்கத் தொடர்ச்சி

களை விசாரித்து, நியாயம் வழங்க, சமாதானமான, சிநேகபாவமான, அக்கறையுள்ள, ஜனநாயகமான முறைகளே கையாளப்படும் என்று உறுதிகூறினர்—உருக்கமாகப் பேசினர்.

ஊராளவந்தபிறகோ— கேட்டது வாழ்வு—கிடைத்தது சாவு!! என்ற முறையிலே 'தர்பார்' நடைபெறுகிறது.

என்னிடமா?—என்று உரத்த குரலில் பேசுகின்றனர்—கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசுகின்றனர். அந்தக்குண்டுகள், கண்ணிலே மட்டுமே எரிச்சலை உண்டக்கும்—அதுவும் வெங்காயச்சாறு பூசிக்கொண்டால் கண்ணும் எரியாது என்று கிளர்ச்சிக்கூட்டத்திலே பேசுகின்றனர்—ஆனால், ஆளவந்தார்கள் வீசும் பேச்சுக்குண்டுகள் எந்தச்சாறு பிழிந்தாலும், குறைக்க முடியாத, மனப்புண்ணை உண்டாக்கக் கூடியவை. N. G. O. க்களின் வேலைநிறுத்தத்தின்போது, 'தினசரி' உபயோகித்த கண்டனச் சொற்கள் உண்டாக்கும் மனப்புண், என்றுமே, ஆறமுடியாது, 'தினசரி' உபயோகித்தவார்த்தைகளிலே மிக முக்கியமானது,

"இலஞ்சத்தில் புரள்கிறார்கள்" என்பது. இது மனப்புண் உண்டாக்குவது மட்டுமல்ல—உண்மையை அடிப்படையாகக் கொண்ட குற்றச்சாட்டாக இருக்குமானால் வேலைநிறுத்தம் முடிந்ததா இல்லையா என்பது பற்றிய பிரச்சினையைவிட, இப்படிப்பட்டவர்களேதான் இப்போது மீண்டும் வேலையில் இருக்கப் போகிறார்களா? ஏன்? அவர்கள் அவ்விதக்குற்றம் செய்திருந்தால், ஏன் சர்க்கார் பகிரங்கமாக விசாரணை நடத்தக்கூடாது — நீக்கக்கூடாது — என்று பொதுமக்கள் கேட்கவேண்டிய புதிய பொறுப்பையும் கிளப்புவதாக இருக்கிறது.

வேலைநிறுத்தம் ஏற்படுவதற்கு ஒரு விநாடிக்கு முன்புவரை, 'நல்லவர்கள்'—வேலைநிறுத்தம் ஏற்பட்ட உடனே அவர்கள், இலஞ்சத்தில் உழல்பவர்கள், ஏகாதிபத்ய ஏவலர்கள், பொதுஜன விரோதிகள், பேடைகள், கூண்டோடு தொலையவேண்டியவர்கள், இத்யாதி, இத்யாதி—சரியா? இத்தகைய பேச்சுக்குண்டுகளை, ஆளவந்தார்களே, வீசுகிறார்கள்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் பேசப் பயப்பட்ட, செய்வதற்குக் கூச்சப்பட்ட காரியங்களை, தாராளமாகவும் தைரியமாகவும் இவர்கள் செய்கின்றனர்—ஒளிவு மறைவு இன்றி—எல்லாம் பொதுமக்கள் பெயரால்— பொதுமக்களின் ஆதரவு இருப்பதாகக்கூறிக்கொண்டு. அவர்கள் செய்வதுமட்டுமல்ல — பொதுமக்களும் ஒவ்வொரு சம்பவம் நடைபெறும்போதும், துயரமிக்க பயங்கரத் தொடர்கதையின் ஓர் அங்கம் இது என்று கொள்ளாமல், கருதாமல், அக்கறையற்றுள்ளனர் என்பதை மறைத்துப் பயனில்லை. அதைவிட ஆபத்தானதும் இருக்கிறது— அதாவது, சர்க்கார் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைச் சரியானவை என்று வாதிடும் மனப்பான்மை, அந்த மனப்பான்மையை வளர்க்கும் பத்திரிகைகள்.

ஆளும் கட்சிக்கு, அச்சம் ஊட்டக்கூடிய ஒருகட்சி சட்ட சபையில் இல்லை.

பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளும் போக்கு, பொதுஜனத் தலைவர்களுக்கு இல்லை.

தேர்தலின்போது என்னென்ன கூறினர்—இன்று என்ன நடக்கிறது என்பதை ஒப்பிட்டுப்பார்க்கும் அரசியல் நுண்ணறிவு பொதுமக்களில் பெரும்பாலோருக்கு இல்லை.

அந்த நுண்ணறிவை வளர்க்கும் நன்னெறியைக் கொள்ளும் போக்கு பெரும்பாலான பத்திரிகைகளுக்கு இல்லை.

எனவே, இங்கு அவதிக்கிடையே அமைதி, சோகத்துக்கிடையே மகிழ்ச்சி, வறுமைக்கிடையே செல்வம், என்பதுபோல, அதிருப்தி அதிகரித்திருக்கும் நிலையிலே, அடக்குமுறைக்கு மத்தியிலே, எதேச்சாதிகாரப்போக்குக்கு இடையிலே, பொதுமக்களின் ஆதரவு இருக்கிறது என்று கூறிக்கொள்ளும் ஆளவந்தார்கள் உள்ளனர். இந்த வேதனைமிக்க கசப்பிய உண்மைதான், N. G. O. வேலை நிறுத்தம் பயனற்றுப் போனதற்குக் காரணம். அவர்களின் பலக்குறைவு அல்லகாரணம்— பொதுமக்களின் கவனக் குறைவு — பத்திரிகையின் நேர்மைக்குறைவு — ஆளும் கட்சியைத்தட்டிக் கேட்கும் ஆற்றலோடு, ஆட்சிப்பீடத்திற் கருகே ஓர் எதிர்க்கட்சி இல்லாத குறை! லெனினற்ற ஜார்போல், ரூசோ அற்ற லூயிபோல் நிலைமை இருக்கிற காரணத்தால் தான், இதுவரை நடைபெற்ற, எந்த வேலை நிறுத்தமும் வெற்றிபெறவில்லை — வேலை நிறுத்தம் வெற்றி பெறாததுமட்டுமில்லை, ஆளவந்தார்கள் [illegible] செய்த அந்தத் தவறும் திருத்தப்படவில்லை — திருத்த வேண்டும் என்ற எண்ணமும் இல்லை — ஏன் என்று கேட்கும் போக்கு, மங்கி மறைகிறது; ஹிட்லரின் குரல்வலுத்தது — அவன் வாழ்க என்ற ஒலி மட்டுமே மிச்சமாயிற்று, மற்றக்குரல் எதும் கேட்கப்படவில்லை ஜெர்மனியிலே!!

பொதுமக்களின் மனதைப் பிரசார பலத்தாலும், நியாயமான காரணங்களுக்காகப் போராடுபவர்களின் சக்தியை அடக்குமுறையாலும், முன்னதை மயக்கவும், பின்னதை முறிக்கவும், இன்றுள்ள ஆளவந்தார்களுக்கு வாய்ப்புஇருக்கிறது. எனவே அவர்கள், காளியிடம்மந்திரவாளும், கூளியிடம் பறக்கும் குதிரையும் பெற்ற மன்னன்போல், இன்றுஆட்சி செய்யமுடிகிறது.

இதனாலேயே, அவர்களால் எவ்வளவு நியாயமான காரணங்களுக்காக, எவர், எவ்விதமான கிளர்ச்சி நடத்தினாலும் அடக்கமுடிகிறது.

இந்தப்பலம் எப்படி வளர்ந்தது என்பது பழங்கதை—வளர்ந்த பலம் எப்படிக்காப்பாற்றப்படுகிறது என்பது கவனிக்கப்படவேண்டிய முக்கியமான பிரச்சினை. கிளர்ச்சிநடத்துபவர்கள் ஒவ்வொருவரும், தத்தம் கட்சியின் நியாயத்தை எடுத்துக் கூறும்போதும், தங்கள் நியாயத்தை வலியுறுத்துகிறார்கள்— அதேபோது, தங்கள் பற்றும் பாசமும், பக்தியும், ஆளவந்தார்களான காங்கிரஸ் கட்சிக்கே உரியது என்றும் பேசுகிறார்கள் — பேசுகிறார்களா! — அந்த வார்த்தை போதாது — பக்திப் பரவசமாகி [illegible] இருக்கிறது— இந்நிலையில் காங்கிரஸைக் குறை கூறினால், பொதுமக்களின் கோபத்தைக்கிளறுவதாகும்—என்று ஓர் தவறானவியாக்யானம் தந்துவிட்டு, பழம் பாடலில் வருகிற முறைப்படி.

"இருந்து முகந் திருத்தி ஈரோடு பேன் வாங்கி விருந்து வந்தது"

என்று உரைக்க, ஆளவந்தார்கள்,

"ஆடினாள், ஆடி; பழம் முறையால் சாடினாள் ஓட்டோடத்தான்."

என்ற புதிய முறையிலே நடந்து கொள்கிறார்கள்.

காங்கிரசின் மகத்தான சக்தியையும், அதனிடம் தங்களுக்குள்ள பக்தியையும் தாங்களே, கூறிவிட்டுப் பிறகு, தங்கள் எதிர்ப்புக்கு, காங்கிரஸ் பயந்துவிடும் என்று எண்ணுவது ஏமாளித்தனம்.

கிளர்ச்சி துவக்கப்படுவதற்கு ஒரு விநாடி முன்பு வரையிலும், எந்தக் கட்சியின் பலத்தை வளர்க்க இவர்கள் முற்படுகிறார்களோ, அதே கட்சி, இவர்கள் தரும் ஆதரவினால் மேலும் மேலும் வலிவு பெற்று, ஏதோ ஓர் சமயம் இவர்கள் தமது குறைகள் தாங்கொணாது போய், எதிர்க்கும் போது, ஒரு முறைப்பால், ஒரு கனைப்பினால், இவர்களை வீழ்த்தி விடுகிறது. வீழ்ந்தபோது, விழிக்கிறார்கள்—விம்மி ஓய்ந்ததும், பழையபடி, காங்கிரசின் புகழ்பாடத் தொடங்குகிறார்கள்—பழையபடி, அந்தக் கட்சியின் பலம் வளருகிறது.

பல, கிளர்ச்சிகள், மிகமிகத் தீவிரவாதிகளால் நடத்தப்பட்டும், சரிவதன் காரணம் இதுதான்.

வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்ட கையோடு கையாக, தோழர் ஜகதீச ஐயர் விட்ட அறிக்கையிலே கூட இந்த விஷவித்து இருப்பதைக் காணலாம்.

"ஏதோ குடும்பத்திலே சண்டை நடைபெறுவது போல, எங்களுக்கும் சர்க்காருக்கும் நடைபெற்றது. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில், சர்க்காரை எதிர்த்துக் குலைக்க விரும்பியவர்களுக்கு நாங்கள் துளியும் இடந்தரவில்லை" என்று அந்த அறிக்கையிலே கூறியிருக்கிறார்.

இதுவரை, நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடுகிறார்கள் என்பதற்காக, யாரார் N. G. O. க்களை ஆதரித்தார்களோ, அவர்களை எல்லாம், ஒரு அறிக்கை மூலம் தூக்கி வாரிப் போட்டுக்கொண்டே, துரைத்தனத்தாருக்குத் தூபதீப நைவேத்தியம் காட்டுகிறார்! வரம்கிடைக்குமா என்பது ஒருபுறமிருக்க, அவருடைய அறிக்கை மூலம், யாரோ இவர்களை உபயோகித்துக் கொண்டு ஊராள்பவர்களை குலைக்க விரும்பியது போலவும், இவர்கள் ஊராள்பவர்களிடம் உள்ளன்பு கொண்டவர்கள், இதற்கு இடங்கொடாது இருந்ததாகவும், ஜாடையாகச் சர்க்காரிடம் சாடி சொல்லுகிற வேடிக்கை தொக்கியிருப்பதைக் காணுங்கள்.

இத்தகைய மனப்போக்குத்தான், எங்கும் நிலையிலே, ஆளும் கட்சி வருகிறபோதெல்லாம், உதவிக்கு முன் வருகிறது— உரம்பெற்றெழுந்து அந்தக் கட்சியினர், ஈடு எதிர்ப்பு எமக்கு இல்லை என்று பேச முடிகிறது.

இந்த மனப்போக்கு; பணிந்து பணிந்து பழக்கப்பட்டுப் போன N. G. O. க்களிடம் இருப்பது ஆச்சரியமல்ல—பாதாளத்திலிருந்து பதங்களை எடுத்து வீசி, அண்டம் வரை முட்டவிட்டு, நெட்டுருப் போட்ட லெனின் சுலோகங்களைக் கொட்டிவிட்டு, மாஸ்கோவுக்கும் இந்நாட்டுக்கும் இடையிலே, ஒரேவழி—அது சென்னை டேவிட்சன் தெரு—என்று மனப்பால் குடிக்கும் மார்க்சீய பக்த கோடிகளுக்கே, இதே மனப்பான்மைதான் இருக்கிறது.

"காங்கிரஸ்—? ஆஹா! மகத்தான ஸ்தாபனம்! மாசு இல்லை, மருவில்லை! அதன் உயர்வுக்கு ஊழியம் புரிவோம்! ஆனால் அதிலே குடி ஏறிய, பிர்லாக்களை டாட்டாக்களை, பாபாக்களை படேல்களை, சண்முகங்களை முகர்ஜீக்களை, வெளி ஏற்றுவோம்—என்றுதான் பேசுவர்— இதுதான் அறிவின் சிகரம் என்று கூறுகின்றனர். அவர்களிடம் உள்ள அளவுகோல் அவ்வளவு சிறியது!! கம்யூனிஸ்டு கர்ஜனையாளர் நண்பர் ஜீவா, கூறுகிறார், "நாங்கள் காங்கிரஸ் எனும் கோபுரம், வெடித்திருப்பது கண்டு, அதற்கு 'சாந்து' பூசுகிறோம்—திராவிடர் கழகமோ, அதனைத் தகர்க்க விரும்புகிறது" என்று கூறுகிறார். துடிக்கும் மீசை ஒருபுறம், துள்ளும் ஆசை மற்றோர் புறம்! கோபத்துக்கும் காதலுக்கும் இடையே சிக்கி பூதப்பாண்டித் தோழர், படாத பாடு படுகிறார்—அவர் தேடாத காரணம் காணோம்—பாடாத பழம் பாடலும் இல்லை! கலனான கோபுரத்தைக் கட்டிக் காத்திடுபவர்கள், ஊர் மக்களுக்கு ஊறுதேடுபவர்கள் என்போம் நாம்—அவர்களோ, அதுஓர் கைங்கரியம் என்று எண்ணுகிறார்கள்.

நாடாளும் முறை, அதற்காகச் சேர்ந்துள்ள தலைவர்கள், அவர்களின் திட்டங்கள், முதலியவற்றைக் குறையுடையன, மக்களின் நலனுக்குக் கேடு பயப்பன, ஏகாதிபத்ய வாடை வீசுவன, என்றெல்லாம் கூறிக் கொண்டே, 'எனினும், நேரு சர்க்கார் பலப்பட வேண்டும்' என்றும் பேசுகின்றனர்.

புராண காலப்போக்கு இதுபோல் உண்டு! கல்லாகும்படி எந்த அகலிகையைக் கௌதமன் சபித்தானோ, அவளை அயோத்தி ராமனின் கால் தூசின் மகிமையால் பெண்ணாக, அவளை மீண்டும் ஏற்றுக்கொண்ட போக்கு!! மனுவின் மூதாதையரின் இந்த மகத்துவத்தை, நமது நாட்களில் மார்க்சீயர்கள், மறந்தும் கைவிடவில்லை.

இவர்களின் சொந்த இயல்புக்கு மட்டுமே, இவை எடுத்துக் காட்டுகளாக இருப்பின், நமக்கு, நகைச்சுவைக்குப் பயன்படும் சிலபல இவை என்று விட்டுவிடலாம். ஆனால் இந்தப்போக்கு நாட்டைக்காட்டுமுறைக்கு இழுத்துச் செல்ல உதவுகிறது என்பதை எண்ணும் போதுதான், உண்மையிலேயே வருத்தமுண்டாகிறது.

இந்தப் போக்கு மாறி, உண்மை ஜனநாயக உணர்ச்சி பரவினாலொழிய, N. G. O. க்கள் மட்டுமல்ல, எவர் துவக்கும் கிளர்ச்சியும், வேலை நிறுத்தமும், ஆட்சி புரியும் கட்சியினரின் இரட்டைக் குழல் துப்பாக்கியால் பொசுக்கப்பட்டுத்தான் போகும். எந்தச் சக்தி, உண்

(அடுத்த பக்கம் பார்க்க)

தைப் பொங்கல் திருநாளில், தமிழர்
வளர்க்கும் பத்திரிகையின் பொங்கல் மலர் வருகிறது!

**"பொன்னி" பொங்கல் மலர்**

பலவர்ண ஓவியப் புதுமைகள்!
காட்சியும் மிளிரும் கவிதைச் சுவைகள்!
ஆர்ட் தாளில் கிரௌன் ¼ அளவில் தயாராகிறது
விலை ரூ 2—8—0 தபாற் செலவு 0—8—0
**'பொன்னி' அலுவலகம்,**
த. பெ. எண் 39 :: புதுக்கோட்டை.

(முன்பக்கத் தொடர்ச்சி)

மையிலே மக்களை ஆசைகாட்டியும், பயமூட்டியும் அடக்கும் சக்தியாக மாறிவருகிறதோ, அதனை வளர்த்துக் கொண்டே, அதன் தாக்குதலையும் சமாளிக்க முடியும் என்று எண்ணுவது, பகற் கனவு. இந்த ஆட்சியை நடத்தும் கட்சிக்குப் பத்தினிகளாக இருந்துகொண்டே, 'அண்டை பக்கம் பார்த்து' "என் ஆசைக்கினியவர் அடித்த அடி, ஆத்தே! கொழுக்கட்டை அளவு தழும்புகளை உண்டாக்கிவிட்டது" என்று குறை கூறி, "நீ நாசமாய்ப்போக! ஊரிலே நாலு பேர் இல்லையா, நியாயம் கேட்க!" என்றும் கதறி, மேலும் அவன் அடக்க அடங்கி, அழுகை, சோகமாகி, சோகம் மௌனமாகி, மௌனம் பிறகு மெள்ள மெள்ளக் கலைந்து, "என்ன இருந்தாலும், உங்களைத் தவிர எனக்கு வேறு யார்?" என்று உதட்டளவுடன் ஆசை மொழி பேசிடும், அம்மையின் நிலையில், எதிர்ப்புச் சக்திகள் இருப்பதால்தான், இதுவரை நடைபெற்ற எல்லா வேலை நிறுத்தங்களும், கிளர்ச்சிகளும், தோற்றன! எனவே N. G. O.க்கள், வேலை நிறுத்தம் தோற்றது, ஏதோ ஓர் தனியான சம்பவம் என்று நாம் எண்ணவில்லை. பாசிசத்தின் பால லீலைகளிலே இஃதொன்று! பாசிசப் போக்கை, பஞ்சணை அருகே சென்று, பக்க நின்று பக்குவமாகப் பேசி, மாற்றிட முடியும் என்று எண்ணுவதேதான், இன்றுள்ள எதிர்ப்புச் சக்திகளின் நிலைமை. இவர்கள் ஒவ்வொருவரும், தமக்கு இடர் உற்றபோது பேசிடும் போக்குடன் திருப்தி அடைவது பலன் தராது. அனைவரும் கூடி முதலில் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும், பாசிசம் பிறந்துவிட்டது என்று! பாசிசத்துக்கு எதிரிடையான கருத்தைத் திரட்டவேண்டும். அப்போதுதான் உண்மையான 'ஜன சக்தி' கிளம்பும்!

ஆசைக்கும் அச்சத்துக்கும் இடையே ஊசலாடுவோர், பூசலின் போது வசவும், பூரித்திருக்கும் போது புன்னகையும் பெறமுடியுமே யொழிய, வெற்றிபெற முடியாது. இந்தச் சூட்சமத்தை உணரும்வரை, சூறுவளியையும், ஆளவந்தார்களால், அடக்கிவிட முடியும் — அடக்கியும் வருகிறார்கள்.

✼

பட்டி மன்றம்

# ★ கல்வித்திட்டம் ★

[பொன். கு. கோதண்டபாணி.]

இருநூறு ஆண்டு அந்நிய ஏகாதிபத்ய அடிமைத் தளையில் சிக்குண்டு சீரழிந்த இந்திய துணைக்கண்டம் இன்று விடுதலைபெற்று, அதன் ஆட்சி இந்தியர்கைக்கு மாறியுள்ளது. அடிமை வாழ்வில், பொருளாதாரத் துறையில் தாழ்ததப்பட்டது போல் கல்வித் துறையிலும் பிற்போக்கடைந்து இருக்கின்றனர். இங்கு 12 சத விகிதம் மக்களே படித்தவர்கள் எனும் நிலையுள்ளது. இங்கு கல்விக்காகச் செலவு செய்யப்படும் பொருள் சராசரி ஒருவருக்கு எட்டு அணு ஒன்பது பை தான். ஆனால் ஐரோப்பியநாடுகளில் படித்தவர்களின் எண்ணிக்கை 90 சத விகிதத்திற்கு மேற்பட்டுள்ளது. அங்குகல்விக்காகச்சராசரி ஒருவருக்கு 33 ரூபாய் வீதம் செலவிடப்படுகிறது. ஆகவே கல்வியின் பயனை அந்நிய நாடுகள் அறிந்துள்ள அளவு நாம் இன்னும் அறியவில்லை. அறியாமையைப் போக்கி அறிவைத்தர வல்லது கல்வி. மாக்களிலிருந்து மக்களை வேறுபடுத்துவது கல்வியே ஆகும்.

அரசாங்கத்திற்கு வருவாயின் பெரும்பகுதி கிராமப் பகுதிகளினின்றுதான்கிடைக்கின்றது. ஆனால் அங்குள்ள மக்களில் 90 சத விகிதம் பேர் கல்வி அற்றவர்களாகவே இருக்கின்றார்கள். ஆகவே அங்கு ஆரம்ப, நடுத்தர, உயர்தரப் பள்ளிகள் உண்டாக்குதல் வேண்டும். ஆரம்பக்கல்வி ஒவ்வொருவருக்கும் இலவசமாய் கட்டாயக் கல்வியாக்க வேண்டும். இன்றைய பாட புத்தகங்கள் உத்தியோகத்திற்கும், மத உணர்ச்சியைப் பெறுவதற்கும் பயன்படுமே தவிர, உலகியல் அறிவை—புத்தறிவை அடையக் கூடியதாக இல்லை. பாட புத்தகங்கள் விஞ்ஞான அறிவையும், தொழிற் கல்வியையும் கொடுக்கக் கூடியதாக அமைதல் வேண்டும்.

தொழிற்சாலைகளிலுள்ளவர்களுக்கு வேலை நேரத்தில் ஒரு மணி நேரம் ஒதுக்கிக், கல்விகற்பிக்கலாம். பெண்களுக்கும், சிறுவர்களுக்கும் வானொலி மூலமும் படக் காட்சிகள் மூலமும் கல்வி போதிக்க முடியும். கல்விச்சாலைகள்பெரும்பாலும் இயற்கைபழகுடன் கூடிய இடங்களில் அமைதல் வேண்டும். சிறுவர்களுக்கு கல்வி என்றால் கசப்பு ஏற்படாவண்ணம், அவர்களின் விளையாட்டின் மூலமேகல்வியைப்புகட்டலாம். சிறுவர்களுக்குக் கல்வி புகட்டப் பெண் உபாத்தியாயர்களை அமர்த்துதல் நன்று. ஆண், பெண் பேதத்தை சிறுவர்கள் உள்ளத்தில் புகுத்தாத முறையில் கல்விமுறை அமைதல் வேண்டும்.

பாடபுத்தகங்களில் ஆபாச ... சாதி வேற்றுமை, கடவுள் போதனை போன்றவைகளை ஆதாரமாகக் கொண்ட வாசகங்களையும் கருத்துக்களையும் அறவே நீக்குதல் வேண்டும்.

சரித்திர நூல்களும், மதபிரச்சார நூலகளாகவும், உயர்வு தாழ்வு கற்பிப்பதாகவும் உள்ளன. இந்திய தேச சரித்திரத்தில்வடநாட்டுச்சரித்திரமே அதிகமாகக்கற்பிக்கப்படுவதால்,இனிமேல் தென்னிந்திய சரித்திரத்தை அதிகமாக கற்பிப்பதோடு, அதைத் தனிப் பரிட்சைக்குரியதாகச் செய்ய வேண்டும். தாய்மொழியோடு துணையாக உலகமதிப்புப் பெற்ற ஆங்கிலமும் கற்பிக்கவேண்டும். அதன் மூலமாகவே உலகியல் அறிவையும், விஞ்ஞான, தொழில் அறிவையும் பெறல் முடியும். இத்தகு கல்வி நாட்டில் வளர வேண்டுமானால் கற்பிப்பவர்களின் வாழ்க்கை நிலை உயரவேண்டும்.

மதத்தின் சார்பாகக்கோயில்களில் முடங்கிக் கிடக்கும் கோடிக் கணக்கான பொருள்களை கல்விக்குப்பயன்படுத்த அரசாங்கம் சட்டம் செய்தல் வேண்டும். மக்கள் ஒவ்வொருவரும் என்று கல்வி அறிவுடையவர்களாக விளங்குகின்றனரோ அன்றுதான் நம் நாடு உலகநாடுகளுடன் உயர்ந்து விளங்கும்.

# மணவினையில் பிணவினை

[நக்கீரன்]

பொய்யென்றும், புனைந்துரையென்றும், புளுகென்றும் நினைப்பீர்கள். அதுமட்டுமல்ல, இல்லாததையும்—பொல்லாததையும் இட்டுக்கட்டி எழுதுகின்றான் என்றுகூட எண்ணுவீர்கள். நாத்திகன் இவன், நாக்கூசாது உரைக்கின்றான்; மகேசுவரன் மயிருக்கு ஆசைப்பட்டார் என்பதாக மனமறிந்த பொய் புகல்கிறான் என்று கூறுவதற்குக் கூடச் சில சைவமெய்யன்பர்கள் சற்றுந் தயங்கமாட்டார்கள்.

ஆனால், நிகழ்ச்சியோ, உண்மையென்று நம்பவேண்டும்—இல்லையேல் நரகம்தான் என்ற முறையில் உள்ளதும், 'உலகெலாமுணர்ந்தோதற்கரியவன்' என்று மகேசுவரனாலேயே அடியெடுத்துக் கொடுத்துப் பாடப்பட்டதும் என்று சொல்லப்படும் பெரிய புராணத்தில் காணப்படுவதுதான். நாமாக ஒன்றும் இட்டுக்கட்டியோ, புனைந்தோ, புளுகாகவோ இல்லாததையோ, பொல்லாததையோ புதிதாகக்கூறவில்லை அந்தவேலையும் நமக்கில்லை. புராணங்கள், அந்த வேலையைத் திறம்படச் செய்துள்ளன. எனவே, மகேசுவரன், மயிருக்கு ஆசைப்பட்டார் என்பது, புராணமுறைப்படி உண்மையான நிகழ்ச்சியாகும். எப்படியென்று கேட்கிறீர்களா?

கஞ்சாறூரிலே மானக்கஞ்சாறர் என்றொருவர் இருந்தார். இவருக்கு நீண்டகாலமாக மகப்பேறு இல்லாமல் இருந்தது. பின்னர் ஒரு பெண் மகவு பெம்மானருளால் பிறந்தது. அந்தப்பெண்ணை, ஏயர்கோன்கலிக்காமர் என்பவருக்கு மணம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு, மணநாளும் நிச்சயிக்கப்பட்டுவிட்டது. பெண்ணும் மணக்கோலம் பூண்டு, மணவாளன் வருகையை எதிர்நோக்கி நிற்கின்றாள், இந்தச் சமயத்தில், மகேசுவரன், ஒரு மாவிரதி வடிவந்தாங்கி, அதாவது மகேசுவரனை எலும்புமாலை பூண்ட வடிவத்தில் வழிபடும் சமயத்தவராய்—எலும்பாலான மாலைகளை அணிந்துகொண்டு மானக்கஞ்சாறர்வீட்டுக்கு வருகின்றார். வந்தவர், "இங்குஎன்ன மங்கலகாரியம் நடக்கப்போகிறது'! என்று கேட்க, அதற்கு மானக்கஞ்சாறர், "அடியேனது ஒரு புதல்விக்குத் திருமணம் நடக்கப்போகிறது" என்று கூறுகிறார். பின்னர், மணமகளை அழைத்துவந்து மாவிரதியாரை வணங்கும்படி செய்கிறார். மணப்பெண்ணின் மேகம்போன்று தழைத்துப்பொலியும் அழகிய கூந்தல்மீது விரதியார் மனஞ்சென்றது. உடனே பெண்ணின் தந்தையை நோக்கி, "இவ்வணங்கின் கூந்தல் நமது பஞ்சவடிக்கு உதவக்கூடும்" என்றார். என்றதும் மானக்கஞ்சாறர் தமது உடைவாளை உருவிப் புதல்வியின் கூந்தலை அறுத்து மாவிரதியாரிடம் நீட்டினார், அவர் அதை வாங்குவார்போல் நின்று, உடனேமறைந்துவிட்டார். மறைந்தவர், மழவிடைமேல் காட்சி தந்து, கஞ்சாறரை நோக்கி, "நம்மாட்டு உனக்குள்ள அன்பின் திறத்தை உலகறியச் செய்தோம். இனி நம்மையடைவாயாக" என்று கூறி மறுபடியும் மறைந்துவிட்டார். மானக்கஞ்சாறரும் மகேசுவரன் திருவடியைப் போயடைந்தார். அதன் பின்னர், மணமகன் அங்கேவர, மணப்பெண்ணின் கூந்தல முன்போல் வளரப்பெற, அவர், அவளை மணந்துகொண்டு தம்மூருக்குப்போய்விட்டார் என்ற இவ்வளவே இந்நிகழ்ச்சியின் சுருக்கமாகும்.

எனவே, இப்போது, மகேசுவரன் மயிருக்கு ஆசைப்பட்டார் என்று நான் கூறியதைக் குற்றமாகவோ, குறைத்துக்கொண்டு கூறப்பட்டதென்றோ எவரும் கருதமாட்டார்கள் என்றுநம்புகிறேன். மகேசுவரன் உண்மையாகவே மயிருக்கு ஆசைப்பட்டிருக்கிறார். அதிலும் ஒருபெண்ணின் அழகை அணி செய்யும் கூந்தலையன்றோ விரும்பியிருக்கிறார். பெண் என்றால், எந்த நிலையில் இருந்த பெண்? மணக்கோலம் பூண்டு மணவாளனின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு நின்ற ஒரு பெண்ணின் கூந்தலையன்றோ பெருந்தகையாம் எங்கள் சிவன் ஆசைப்பட்டார் என்று சிவ அன்பர்கள் கருதிக் களிபேருவகை அடைவர் போலும்!

மானக்கஞ்சாறரின் பட்டுக்கடங்காத அன்பு வெள்ளத்தை அள்ளிப் பருகவந்த சிவன், அவருடைய அன்பை அளந்தறியும் கருவியாக ஒரு அரிவையின் கூந்தலைத்தான் தேடிக் கண்டு பிடிக்கவேண்டுமா? அதிலும் ஒரு ஆணழகனோடு கூடி வாழும் பருவத்திலும்—நிலையிலும் இருந்த ஒரு பெண்ணின் கூந்தலை விரும்பிக் கேட்பதுதான் அந்த விருப்பு வெறுப்பற்ற கடவுளின் நெறிமுறையின்பாற்பட்ட செயலா? அடியவர்களின் அன்புப்பெருக்கை, அளந்தறியவரும் அண்ணலுக்கு, அரிவையார்மீதும் அவர் தம் அழகிய கூந்தல்மீதும்தானா கருத்துச்செல்லவேண்டும்? இயற்பகையின் அன்பைச் சோதிக்கப்போந்த சிவன், அவருடைய மனைவியையே விரும்பிக்கேட்டுப்பெற்றார் என்பதாகப் பெரியபுராணத்திலேயே இன்னொரு நிகழ்ச்சியும் உண்டு. இதுமட்டுமல்ல,

திண்ணனாரிடம் அவர் கண்களைக் கேட்டார்.

சிறுத்தொண்டரிடம் அவர் பிள்ளையின் கறியைக் கேட்டார்.

கலயரிடம் அவர் மனைவியின் தாலியை விற்றாகிலும் தமக்குக் குங்குலியத்தூபம் போடச்சொன்னார்.

அமர்நீதியிடம், ஒரு கோவணத்துக்காக, அவரையும், அவருடைய மனைவி மக்களையும், சொத்து முழுவதையும் தமக்குத்தரும்படி கேட்டார்.

மூர்த்தியாரிடம், அவருடைய முழங்கையைத் தேய்த்தாவது தமக்குச் சந்தனக் காப்புச் சாத்தும்படி சொன்னார்.

மூர்க்கரிடம், சூதாடியும், சூதாட்டத்தில் தோற்போரைக் கொன்றும் தம்முடைய அடியவர்களுக்கு அன்னமிடச் சொன்னார்.

செருத்துணை என்பவருக்கு, ஒரு மன்னன் மனைவியின் மூக்கை அறுக்கும் முனைப்பை உண்டாக்கினார்.

கழற்சிங்கர் என்பவருக்கு, அவருடைய மனைவியின் கையையே வெட்டித் துணிக்கும் விருப்பத்தகாத எண்ணத்தைக் கொடுத்தார்.

(2-ம் பக்கம் பார்க்க)

Edited Printed Published by C. N. Annadurai M. A. at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi Street. Conjeeveram.